விலை ரூபா 2-00 12 பக்கங்கள்

# ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

மலர் 28 யாழ்ப்பாணம் | சித்திரை 21 ஷஃபா 24 ஞாயிற்றுக்கிழமை | இதழ் 82 (4—5—86)

இனப் பிரச்னை:

## 'இந்தியயூனியன் பிரதேச' அமைப்பு முறைக்கு இணக்கம்?

இந்தியாவின் 'யூனியன் பிரதேச' ஆட்சிமுறையைப் போன்ற அமைப்பைக் கொண்டுவர இலங்கை அரசியல் அமைப்பில் சாதாரண திருத்தங்களைச் செய்வதற்கு இலங்கை அரசு உடன்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆயினும் சர்வஜனவாக்கெடுப்புமூலம் அரசியலமைப்பில் எந்த ஒரு திருத்தத்தையும் செய்ய இலங்கை அரசு மறுத்துள்ளது.

இலங்கை வந்துள்ள திரு. பி. சிதம்பரம் தலைமையிலான இந்தியக் குழுவிடமே மேற்கண்ட விபரம் வெளியிடப்பட்டிருப்பதாக அறியப்படுகின்றது.

இந்த விபரங்களின் அடிப்படையிலேயே இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஏ. ஸி. எஸ். ஹமீட் இந்திய அரசிடம் இனப்பிரச்னை குறித்த புதிய யோசனைகளை

(11ம் பக்கம் பார்க்க)

# ஏயர்லங்கா 'திரைஸ்டார்' விமானம் ★★★ குண்டு வெடிப்பில் தகர்ப்பு!

## 21 பேர் மரணம்; 41 பேர் காயம்!!

(கொழும்பு)

**ஏயர் லங்கா விமானச் சேவை நிறுவனத்தின் 'சிட்டி ஒவ் கொழும்பு' என்ற பெயரைத் தாங்கிய 'திறை ஸ்டார்' ரக விமானமொன்று நேற்று குண்டு வெடிப்பில் இரண்டாகப் பிளந்து வெடித்தது. இச்சம்பவத்தில் 21 பேர் கொல்லப்பட்டனர். 41 பேர் காயமடைந்தனர். கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் மாலைதீவு புறப்படுவதற்கு தயாராகநின்றபோதே அவ்விமானம் குண்டு வெடிப்புக்குள்ளானது.**

பிரிட்டனின் 'காட்விக்' விமான நிலையத்திலிருந்து சூரிச், துபாய் ஊடாக கட்டுநாயக்கா விமான நிலையத்தை இந்த 'திறை ஸ்டார்' விமானம் வந்தடைந்திருந்தது.

330 பயணிகள் இதில் இலங்கை வந்திருந்தனர். காலை 9மணிக்கு கட்டுநாயக்கா வந்தடைந்த இவ்விமானம் சில நிமிட நேரத்தில் தனது பயணத்தை மாலைதீவு நோக்கித் தொடரவிருந்தது. ஆனால் அரை மணி நேரதாமதத்தின் பின்னர் காலை 9-45 மணிக்கே இப்பயணம் இடம்பெறவிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

காலை 9-20 மணியிலேயே பலத்த சத்தத்துடன் இவ்விமானத்தில் குண்டு வெடிப்பு நிகழ்ந்தது. இதனையடுத்து 'ஏயர்லங்கா'வின் மயில்வடிவ சின்னத்தைத் தாங்கிய வால்புறப்பகுதி, சிறகுப்பகுதியுடன் இரண்டாகப் பிளந்து தீப்பற்றிக் கொண்டதெனத் தெரிவிக்கப்பட்டது.

இவ்விமான எஞ்சின்களில் ஒன்று பிரதான ஓடுபாதை வரை தூக்கி வீசப்பட்டது சிதைவுகள் 70 யார் சுற்றுவட்டத்தில் சிதறிப்பரவியிருந்தன.

விமானத்துக்குள் சென்று நேரத்துடனேயே அமர்ந்து கொண்ட பயணிகளில் 21 பேரே குண்டுவெடிப்பில் உட

[11-ம் பக்கம் பார்க்க]

## பாலஸ்தீன பெண் உட்பட பல நாட்டவரும் பாதிப்பு

[கொழும்பு]

நேற்றைய விமானக் குண்டு வெடிப்பில் பாதிக்கப்பட்டவர்களில் ஒரு பாலஸ்தீனப்பெண்மணி உட்பட பல்வேறு நாடுகளையும் சேர்ந்த பயணிகள் அடங்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸ், இத்தாலி ஜப்பான், பிரிட்டன், இந்தியா, பஸ்திரியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த பயணிகளே இவர்களாவர்.

பாதிக்கப் பட்டவர்களில் இறந்தவர்களின் சடலங்கள் அடையாளம் காண்பதற்காக நீர்கொழும்பு வைத்திசாலைப் பிரேகச்சாலையில் வைக்கப்பட்டுள்ளன.

காயமடைந்தோர் ஆபத்தான நிலயில் இருப்பதால்

(11ம் பக்கம் பார்க்க)

## சிதம்பரம் கவலை

(கொழும்பு)

'ஏர்லகா' விமானக் குண்டு வெடிப்புக் குறித்து இலங்கை வந்துள்ள இந்தியத் தூதுக் குழுவின் தலைவர் திரு ப சிதம்பரம் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இவர் இக்குண்டு வெடிப்புக் குறித்து தமது கவலையையும் வெளியிட்டிருப்பதுடன் உயிரிழந்தவர்களுக்கும் காயப்பட்டவர்களுக்கும் தமது அனுதாபங்களையும் வெளியிட்டிருப்பதாசத் தெரிவிக்கப்பட்டுள்ளது

இதேவேளை இலங்கையில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயமும் இக் குண்டு வெடிப்புக் குறித்து கண்டனம் தெரிவித்துள்ளது.

இச்சம்பவம் மிகவும் வேதனைக்குரியதும், அநாகரிகமானதும் என்று இந்திய உயர் ஸ்தானிகராலயம் கருத்து வெளியிட்டுள்ளது.

## கிளிநொச்சியில் ஆயுதப்படை தேடுதல் இரவு பகல் தீவிரம்

[கிளிநொச்சி]

கிளிநொச்சி மாவட்டத்தில் ஆயுதப்படையினன் தேடுதல் நடவடிக்கைகள் தீவிரமடைந்துள்ளன.

நேற்று 3ம் திகதி சனிக்கிழமை காலை முதல் பரந்தனில் இவர்கள் வாகனங்கள் மீது திடீர் சோதனை மேற்கொண்டதால் போக்குவரத்துத் தாமதம் இங்கு ஏற்பட்டது

கிளிநொச்சியில் இருந்து புறப்பட்ட வாகனங்கள் பரந்தனிலும் அதன் பின்னர் ஆனையிறவுத் தடைமுகாமிலும் சோதனைக்குள்ளாக்கப்பட்டன. சாதாரண உடை தரித்த ஆயுதப்படையினரே பரந்தன் சந்தியில் வாகனச் சோதனையில் ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இரவு பகலாக இடம்பெற்று

[11ம் பக்கம் பார்க்க]

## புதிய ரோந்து கலம்

(புதுடில்லி)

இந்தியக் கரையோர காவல் படையில் 'பீர்' என்னும் புதிய ரோந்துக் கலம் ஒன்று நேற்று சேர்க்கப்பட்டது

18 கோடி ரூபா செலவில் கட்டி முடிக்கப்பட்ட இந்தக் கப்பலில் வலுவான பீரங்கிகளும், ஹெலிகாப்டர் தளமொன்றும் இருக்கின்றன.

## சிதைவுக்குள் 'பிளாக் டைகர்'

[கொழும்பு]

ஏயர் லங்காவின் நேற்றைய 'திறை ஸ்டார்' விமானகுண்டு வெடிப்பின் சிதைவுகளுக்குள் 'பிளாக் டைகர்' என்ற சின்னம் பொறிக்கப்பட்ட தொப்பிகளும் ஆடைகளும் காணப்பட்டன.

இவை ஒரு பொதியாகக் கட்டப்பட்ட நிலையில் இருந்தன. இப் பொதிகளுள்ளேயே அவ்விமானத்துக்குக் குண்டு வைக்கப்பட்டிருக்கலாமென க் கருதப்படுகிறது

இப்பொதி கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்தே ஏற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

புலியின் முகப்புத் தோற்றத்துடன் 'பச்சோந்தி' நிறத்தில் 'பிளாக் டைகர்' தொப்பிகளும், ஆடைகளும் சிதறியிருக்கக் காணப்பட்டன.

'பிளாக் டைகர்' என்ற ஆங்கில எழுத்துடன் கூடிய இந்தச் சான்றுப் பொருட்கள் காணப்பட்டதையடுத்து இக் குண்டு வெடிப்புச் சம்பவத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகள் இயககம், அல்லது தமிழீழ இராணுவம் சம்பந்தப்பட்டிருக்கலாம் எனபாதுகாப்பு வட்

(11ம் பக்கம் பார்க்க)

## ஈழத் தமிழர் வரலாற்றுக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

ஈழத் தமிழர் வரலாற்றினைச் சித்திரிக்கும் ஒரு கண்காட்சியை யாழ்ப்பாணத்தில் அடுத்த மாதம் நடாத்துவதற்கு உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கத்தின் இலங்கைகிளை ஏற்பாடுகளைச் செய்துவருகின்றது!

இக்கண்காட்சியில் ஈழத்தமிழர் வரலாறு தொடர்பான புகைப்படங்கள், நூல்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள், வீடியோ படங்கள் போன்றவை இடம்பெறவுள்ளன.

இக்கண்காட்சிக்குத் தமது பங்களிப்பினைச் செய்யவிரும்பும் தமிழர் அமைப்புகள், வெகுஜன ஸ்தாபனங்கள், விடுதலை ஸ்தாபனங்கள் முதலானவற்றின் ஒத்துழைப்பினை தாம் வரவேற்பதாக உலகத் தமிழர் பண்பாட்டியக்கத்தின் இலங்கைக்கிளை கோரியுள்ளது. [வ]

## இரு இந்திய விமானிகள் காயம்!

(கொழும்பு)

நேற்றைய விமானக் குண்டு வெடிப்பில் இரு இந்திய விமானிகளும் காயமடைந்தனர்.

இந்த இரு விமானிகளும் விமானக் குண்டு வெடிப்பு இடம்பெற்றவேளை தமது விமானத்தை நோக்கி நடந்து வந்து கொண்டிருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. [கு]

வாகனங்கள் பார்வைக்கு:

## விரைவில் பொருட்களும் காட்சிக்கு வருமாம்

(யாழ்ப்பாணம்)

இயக்கம் ஒன்று நேற்றுமுன் தினம் தேடுதல் நடவடிக்கையின்போது, கடத்தப்பட்டதாகக் கூறப்படும் கார்கள், மினிபஸ், மோட்டார் சைக்கிள் ஆகியவற்றைத் தொடர்ந்து கைப்பற்றியுள்ளது.

இவற்றை உரிமையாளர்களிடம் கையளிக்கும் நோக்கமாக யாழ். நகரில் மக்கள் பார்வைக்கு நேற்றும் இவை வைக்கப்பட்டிருந்தன

வாகனங்களின் உரிமையாளர்கள் தகுந்த அத்தாட்சிகளைச் சமர்ப்பித்துத் தத்தமது வாகனங்களைப் பெற்றுக்கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தேடுதல் நடவடிக்கையின்போது கைப்பற்றப்பட்ட கொள்ளை அடிக்கப்பட்டதாகக் கூறப்படும் பல பெறுமதியான பொருள்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் அவற்றையும் மக்கள் பார்வைக்கு விரைவில் வைக்கப்போவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(மா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரி விளம்பரம்

## விற்பனைக்கு

வலம்புரிச்சங்கு - தெய்வீகத் தன்மை வாய்ந்த வலம்புரிச் சங்கு விற்பனைக்குண்டு. தொடர்பு: ஸ்ரீ ஆழ்வார்கள் ஆச்சிரமம், ஆயர்பாடி ஒழுங்கை, தெல்லிப்பழை.
(C-1891)

நல்ல நிலையிலுள்ள Citizen-S4 ஆங்கில தட்டச்சு இயந்திரம் மின்சாரத்தில் இயங்குவது (1.10V) சிங்கர் தையல் மெசின் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். ஆனந்த் வீடியோ சங்குவேலி தெற்கு, மானிப்பாய்.
C 2106

நல்ல இன அல்சேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக் குண்டு. உடன் தொடர்பு கொள்ளவும்: றேய் ராசசிங்கம், சிவகுலவீதி, உரும்பராய் தெற்கு, உரும்பராய்.
(C 2122)

நன்கு பழக்கப்பட்ட ஒரு வயது நான்கு மாதமுடைய Pure Alsation பெண் நாய் உடன் விற்பனைக்குண்டு. பவித்திரா மெடிக்கல்ஸ், கொக்குவில் சந்தி, கொக்குவில்.
(C 2111)

நல்லநிலையிலுள்ள HONDA CG-125 மோட்டார் சயிக்கில் விற்பனைக்குண்டு. தொடர்பு; க. நித்தியானந்தம், 131/4, பருத்தித்துறைவீதி, நல்லூர், யாழ்ப்பாணம். அல்லது சந்திரன் மோட்டார் கராச், வீரமாகாளி அம்மன் கோவிலடி.
(C2119)

புதிய, பழைய இந்தி, தமிழ் திரைப்பட இசைத்தட்டுகள் உடன் விற்பனைக்குண்டு. நேரில் வரவும். த. ஸ்ரீரங்கன் சத்தியபதி, ஆயர்பாடி ஒழுங்கை, தெல்லிப்பழை.
(C2112)

## சேவை

(Typewriters) தட்டச்சு இயந்திரங்கள் சிறந்த முறையில் திருத்த கொடுக்கப்படும். தொடர்பு: Fudo Enterprises 39/17, மின்சார நிலையவீதி, (3ம் ஒழுங்கை) யாழ்ப்பாணம்.
(C2117)

## விற்பனைக்கு

தோட்ட சுப்பிரின்டன் ஒருவரின் தரமான வீட்டுத் தளபாடங்கள், அல்மாரி, கண்ணாடி மேசைகள், எழுது மேசைகள், எலக்ரிக் கேற்றில், சிங்கர் குளிர்சாதனப்பெட்டி, T. V., Washing Machine, Pressure Cooker, றேடியோ, புத்தக அல்மாரி, கிளாஸ்; கோப்பை வகைகள், Toys, Bedsheets மற்றும் பல உடன் விற்பனைக்குண்டு. பத்மநாதன், ஆடியபாதம் றோட், மருத்துவக் கல்லூரிக்கும் திருநெல்வேலிச் சந்திக்குமிடையில்.
(C 2096)

## மணப்பந்தல்

யாழ்ப்பாணம் பிரபல தொழில் ஸ்தாபனத்தில் கடமைபுரியும் 34 வயதுடைய வேளாளர் குலத்தைச் சேர்ந்த நல்லொழுக்கமும், நற்பண்பும் கொண்ட மணமகனுக்கு மணமகள் தேவை. கடிதமூலம்தொடர்புகொள்க. விளம்பரஇல. C2124, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம்.
(C 2124)

யாழ். சைவ வேளாள செவ்வாயுள்ள 27வயது M.B.B.S. பெண்ணுக்கு வரன் தேவை. விளம்பர இல. C 2047, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம்.
(C 2047)

## வகுப்புகள்

A/L 88 இரசாயனவியல் திரு. மகாதேவா அவர்கள். ஆரம்பம்: 5-5-86 திங்கள் மாலை 3-30. நாகலிங்கம் இன்ஸ்ரிடியூட், நாவலடிலேன், திருநெல்வேலி.
[C-2121]

## கல்வி

A/L 87-88 கலை / வர்த்தக வகுப்புக்கள் பிரிவு 'B' ஆரம்பம் 07-05-1986. Modern Education Centre, Karaveddy.
[C1845]

## தவறிவிட்டது

ஐந்து திறப்புக்களைக் கொண்ட கோர்வையொன்று பருத்தித்துறை சந்தைக்கும் உபய கதிர்காமத்திற்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுப்பவர் தயவு செய்து தொடர்பு கொள்க: Dr. P. இரத்தினசிங்கம். புலோலி தெற்கு, புலோலி. தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
[C 2109]

சபாபதி முத்துக்குமாரு என்பவருடைய அடையாள அட்டையுடன் கூடிய மணிபேர்சு மல்லாகத்திற்கும் யாழ்ப்பாணத்திக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 234 A, கே.கே. எஸ். வீதியிலுள்ள மொடேன் மினி சினிமாவில் ஒப்படைக்கவும்.
(C 2128)

கிருபாலினி செல்லத்துரை, 655341153 V இலக்கமுடைய அடையாள அட்டை 18-4-86 இந்து மகளிர் கல்லூரிக்கருகாமையில் தவறிவிட்டது. தயவு செய்து இதனைக் கண்டெடுத்தவர்கள் 131/1, பருத்தித்துறை வீதி, நல்லூர் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
[C-2120]

## வாடகைக்கு

சகல வசதிகளுடன் குடும்பத்திற்கு வீடும், அத்துடன் தனி அறைகளும் பலாலி வீதி இரண்டாம் ஒழுங்கையில் வாடகைக்கு உண்டு. விபரங்களுக்கு:- தரன் ஸ்ரூடியோ, 9, 8, நவீன சந்தை, யாழ்ப்பாணம். போன்: 23858.
(C-2104)

## தேவை

Accounts Clerk பதவிக்கு தகுதிவாய்ந்த பெண்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன யாழ். நகருக்கு அண்மையில் வசிப்பவர்களாயும், கணக்குகளைச் சுயமாகப் பேணத்தக்க அனுபவம் உள்ளவர்களாயும் இருத்தல்வேண்டும். சொந்தக் கையெழுத்தில் பூரணமான சுய விபரங்களோடு 12-05-86 இன் முன் விண்ணப்பிக்கவும். Dyn ads, 476, பிரதானவீதி, சுண்டுக்குளி.
[A-637]

## இன்றும் நடைபெறும் மகாநாடு

(யாழ்ப்பாணம்)

ஜெகோவாவின் சாட்சிகளின் தமிழ்வட்டாரமகாநாடு சாவகச்சேரி ராஜ்ய மண்டபத்தில் இன்றும் தொடர்ந்து நடைபெறுகின்றது.

''உலகளாவிய சகோதரத்துவத்திற்கான அன்பு'' என்ற தொனிப்பொருளைக் கொண்ட இந்த 3நாள் மகாநாடு நேற்று முன்தினம் ஆரம்பமாகியது.

இன்றைய நிகழ்ச்சிகளில் ''பேராபத்திலிருந்துகாப்பாற்றப்பட்ட ஒரு சகோதரத்துவம்'' என்ற தலைப்பிலான பகிரங்கச் சொற்பொழிவு முக்கிய இடத்தினைப்பெறுகின்றது. (ஷ)

## வெள்ளோட்ட விழா

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி சிவன் கோவில் புதிய சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா நடைபெறவுள்ளது. கோவில் வீதியில் புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் 'அமுதசுரபி' மண்டபத்தில் இவ்விழா நடைபெறும். தொடர்ந்து 7-ம் திகதி தேர்த்திருவிழா நடைபெறும். 5, 6, 7-ம் திகதிகளில் அன்னதானம் வழங்கப்படும்.


## தேவை

தாவடி மயானத்திற்கு பிரேதவண்டில் தேவை. விற்பதற்கு உள்ளவர்கள் தொடர்பு கொள்க: ''சீக்கோ'' K. K. S. றோட், தாவடிச் சந்தி, கொக்குவில். P. O.
(C-2123)

சீராக இயங்கிக்கொண்டிருக்கும் தொழிற் ஸ்தாபனம் ஒன்றிற்கு பேக்கரி வேலை தெரிந்தவர்களும் பிஸ்கற், இனிப்பு வகை தயாரிக்கக் கூடிய பெண்களும் உடன் தேவை. சம்பள விபரங்களுக்கு நேரில் தொடர்பு கொள்ளவும். பொ. நிதிராசா முருகையன் கோயில் ஒழுங்கை, லஷ்மி பேக்கரி வல்வெட்டித்துறை.
C 2102

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## முதலாண்டு நினைவஞ்சலி



அமரர்
செல்வி இன்பநிதி சண்முகலிங்கம்
தோற்றம்: 26-11-1973
மறைவு: 15-04-1985
திதி: 04-05-1986

அன்பின் திருவுருவாய் பண்பின் உறைவிடமாய் அறிவின் சுடராய் பாசத்தின் பிறப்பிடமாய் குடும்பத்தின் ஒளிவிளக்காய் இருந்து அணைந்துவிட்ட எங்கள் அன்புத் தெய்வமே நீர் மறைந்து ஓராண்டு ஓடிமறைந்துவிட்டது உங்கள் ஆத்மா சாந்தியடைய எம் உயிருள்ளவரைஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உம் பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, அண்ணா, அக்கா, தங்கை.

மிசன் பாடசாலை-ஒழுங்கை,
நெட்டிலைப்பாய்,
கோண்டாவில்.
C-2126

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



திரு. ந. பத்மநாதன்
(கிளாக்கர்)
தோற்றம்: 03-04-33
மறைவு: 15-05-85
ஆண்டுத்திதி: 04-05-86

எங்களை வாழவைத்த அன்புத் தெய்வமே. ஆண்டு ஒன்றுதான் சென்றுவிட்டதையா. ஆனால் நீ ஏற்றி வைத்த தீபம் இன்றும் எம்நெஞ்சில் எரியுதையா.

இன்று பாவி நான் உன்னை இழந்து நிற்க இந்த பாரினில் நான் செய்த பழிதான் என்ன ஐயா. பொட்டுஇழந்து பூவிழந்து எங்கள் மூவர் புன்னகையில் மண் விழுந்து பட்டுவிட்ட பாவிகள் போல் பரிதவிக்கிறோம் உனை இழந்து. பொங்குகின்ற கண்ணீரால் பூமியெல்லாம் கடலாக்கி அங்கெல்லாம் தேடுகிறோம் ஐயா உன் காலடியை.

உங்கள் ஆத்மா சாந்தியடைய தினமும் பிரார்த்திக்கும்

மனைவி, பிள்ளைகள்.

இணுவில் மேற்கு,
இணுவில். (C 2074)

## திருமண அழைப்பு

உ

அன்புடையீர்!

நிகழும் அக்ஷய வருடம் சித்திரைத் திங்கள் 27-ம் நாள் (10-05-86) சனிக்கிழமை பகல் 12-39 மணிமுதல் 2-27 மணிவரையுள்ள சிங்கலக்கின சுபமுகூர்த்தத்தில்

| எமது புதல்வன் | எமது புதல்வி |
|---|---|
| திருநிறை செல்வன் | திருநிறை செல்வி |
| மகேந்திரமூர்த்தி | கமலாம்பிகை |
| (மூர்த்தி) | (சச்சி) |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

திருவருள் நலத்தினல் தெல்லிநகர் துர்க்கை அம்மாள் ஆலய கல்யாண மண்டபத்தில் திருமணம் நடைபெறும். அத்தருணம் தாங்கள் சுற்றஞ்சூழ வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து ஏகும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

தங்கள் நல்வரவை விரும்பும்:

திரு. மா. சுந்தரமூர்த்தி தம்பதிகள்,
110, சம்பியன் லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

திரு. பெ. சுப்பிரமணியமும் மக்களும்,
ஊரியாட்டி,
சுன்ளுகம்.

(C 2115)

## செஞ்சிலுவைச் சங்கம் யாழ்ப்பாணக் கிளை-பொதுக்கூட்டம்

மேற்படி சங்கத்தின் பொதுக்கூட்டம் மே மாதம் 17-ந் திகதி காலை 9-00 மணிக்கு யாழ். வை. எம். சி. ஏ. கட்டடத்தில் நடைபெறும்.

சகல அங்கத்தவர்களும் இக்கூட்டத்திற்குச் சமுகமளிக்கும்படி கேட்கப்படுகின்றார்கள்.

1986-ம் ஆண்டுக்குரிய அங்கத்துவப் பணத்தை கூட்டம் தொடங்குவதற்குமுன் கட்டவும்.

யாழ்ப்பாணம். தலைவர்.
(A 635)

## புனிதமான இயக்கங்களுக்கு ஓர் பணிவான வேண்டுகோள்

எனது சொந்தப் பாவிப்பிலுள்ள 7 Sri 5418, Ford Cortina GXL கார் 24-4-86 அன்று இனம் தெரியாதவர்களால் கடத்தப்பட்டுள்ளது. தயவுசெய்து சம்பந்தப்பட்டவர்கள் மனிதாபிமான அடிப்படையில் எனது காரைத் திருப்பித் தரும்படி தாழ்மையுடன் வேண்டிக்கொள்கிறேன். புனிதமான இயக்கங்களும் இதில் பங்குகொண்டு எனது காரை மீளப் பெறுவதற்கு உதவி செய்யுமாறு பணிவன்புடன் வேண்டுகிறேன்.

**உரிமையாளர்:**

383/7, நாவலர் ஒழுங்கை, ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

(C 2116) Telephone: 23316.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 10 ஆண்டு காலத்தில் 14 நாடுகளில் 151 அணு சக்தி விபத்துக்கள்

[நியூயோர்க்]

கடந்த பத்தாண்டு காலத்தில் பதினைன்கு நாடுகளில் அணுசக்தி சம்பத்தப்பட்ட நூற்றியம்பத்தொரு விபத்துக்கள் நிகழ்ந்திருப்பதாக அமெரிக்க காங்கிரஸ் குறிப்பிட்டுள்ளது.

அடுத்துவரும் வருடங்களில் நிலமைமேலும் மோசமடையலாம் என்றும் அதன் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க செனட்டில் சமர்பிக்கப்பட்ட புதிய சட்டத்திற்கமைய சர்வதேச அணுசக்தி அதிகாரசபை சோவியத் யூனியனில் ஏற்பட்ட அணுசக்தி விபத்துக் குறித்து விசாரணை செய்வதற்கும் அந்தவிபத்து உலகெங்கும் வாழும் மக்களுக்கும் சோவியத் பிரஜைகளுக்ம்ம் எவ்வளவுதூரம் ஆபத்து ஏற்படுத்தும் என்பதுபற்றியும் ஆராய்வதற்கும் வழி பிறந்துள்ளது. [து]

## பஞ்சாப் அமைச்சர்கள் ராஜினமா

[சண்டிகார்]

பஞ்சாப் வேளாண்மைத் துறை அமைச்சர் காப்டன் அமரீந்திர சிங். கல்வியமைச்சர் திரு. சுஜீத்திரசிங் ஆகியோரின் பதவி விலகிலை மாநில கவர்ணர் திரு. சித்தார் சங்கராய் ஏற்றுக்கொண்டு விட்டார்.

பொற்கோயில் வளாகத்திற்குள் பொலிஸ் நுழைந்ததை ஆட்சேபித்து பதவி விலகுவதாக இந்த இரு அமைச்சர்கள் ஏற்கனவே அறிவித்திருந்தனர்.

இதேவேளை இதேகாரணத்திற்காக அகாலிதள் கட்சியின் துணைத்தலைவர் திரு. சுர்ஜான் சிங் ஹெக்டேதாஸ் கட்சியின் பதவியிலிருந்து விலகிவிட்டார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. [து]

## அடிப்படை மனிதஉரிமை மீறல்: உலக நாடுகள் அனைத்தும் அக்கறைகொள்ளும்விஷயம்

—நடேசன் கியூ ஸி.

[கொழும்பு]

"ஒரு அடிப்படை மனித உரிமை மீறல் இலங்கையில் இடம்பெறுமானல், அது இங்கு மட்டுமே நேரிட்ட ஒரு பிரச்னை யாகிவிடமுடியாது. சர்வதேச நாடுகளும், மக்களும் அக்கறை கொள்ளும் ஒரு விடயமாகின்றது. இதனலேயே வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் உண்மைகளை அறிந்து தமது நாட்டுப் பத்திரிகைகளில் அவர்றைப் பிரசுரிக்க முயலுகிறுர்கள்.

[11ம் பக்கம் பார்க்க]


ஹவுஸ் மெயிட்ஸ்

குவைத்

முஸ்லிம் ஹவுஸ் மெயிட்ஸ்
உடனடி புறப்பாடு

32 வயதுக்குக் கீழ்ப்பட்டோர் மட்டும். வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தால் உத்தியோகபூர்வமாக அங்கீகரிககப்பட்ட கட்டணங்களுக்கு மேல் வேறு கட்டணங்கள் அறவிடப்படமாட்டாது.

பாஸ்போர்ட் 2, 3, 4, 5ஆம் பக்கங்களின் பிரதிகள், முழுமையான போஸ்ட்கார்ட் அளவு புகைப்படம் ஒன்று, 4 பாஸ்போர்ட் அளவு சறுப்புவெள்ளைப் புகைப் படங்கள் சகிதம் நேரில் உடன் வரவும்.

றேயல் ஏஜென்சி
(பிவிடி) லிமிட்டெட்,
158, புதுச் செட்டித் தெரு,
கொழும்பு - 13.

லைசென்ஸ் இல:- 470
அங்கீகார இல:- ஏ. எல். /470/3/85 (A-622)


## 'மாமா, கண்!', 'மாமா, தலை!': ஆடகசௌந்தரியின் மரணஓலம்— 'கண்-தலை' கடைசியில் கந்தளாயாக மாறியதாம்!

[கொழும்பு]

அண்மையில் அணையுடைப்பெடுத்து ஆயிரக் கணக்கான மக்களை நிர்க்கதியாக்கிய கந்தளாய்க் குளத்துக்கு "கந்தளாய்க் குளம்" என்ற பெயர் எப்படி வந்தது என்ற பூர்வீகம் பற்றி கந்தளாய்க்குள வரலாறுபற்றிய விபரங்களை திரட்டுகின்ற ஆராச்சியல் ஈடுபட்டுள்ள திரு. பி. எல். சிறிசேன புதுமையான சுவாரஸ்யமான விளக்கமொன்றினைத் தருகிறுர்.

கி. பி. 927 க்குப் பின்னர் சோழ ஆட்சிக் காலத்தில் குளக்காட்டன் புலத்துக்கு அதிபதியாயிருந்தவர் குளங்களை மேலும் ஆழமாச்குகின்ற முயற்சிகளில பெரு ஆர்வம் காட்டினராம். குறிப்பிட்ட மேற்படி குளத்தை ஆழமாக்கிய பின்பல தடவைகள் அணைகட்ட முயன்றும் அந்த அணை உடைப்பெடுத்ததாம் குளத்துக்கு ஒரு கன்னியைப் பலி கொடுத்தாலே இந்தக் குறைபாடு நிவர்த்தியாகும் என அவருக்கு ஆலோசனை வழங்கப்பட்ட விடத்தும் அவரால் அதற்கான கன்னியொருத்தியைத் தேடிக் கண்டுபிடிக்க முடியவில்லையாம்.

இறுதியில் தமதுகன்னிமருமகளான ஆடகசௌந்தரியை குழத்தின் நடுவேவைத்து அவளை அங்கு உயிருடன் 'சமாதி' கட்ட முயன்று, ஆடகசௌந்தரியின் மீது முதல்தடவை மண்போடப்பட்டபோது 'மாமா, கண்' என அவள் கதறினளாம்! மீண்டும் மீண்டும் மண் போடப்பட்டபோது 'மாமா தலை!' என்று ஓலமிட்டாளாம்.

ஆடகசௌந்தரி இறக்கு முன் இறுதியாகக் கதறிய அந்த 'மாமா கண்' 'மாமா தலை' என்ற ஓலங்கள் 'கண் தலை' எனக் காலப்போக்கில் திரிந்து இறுதியில் கந்தளாய் என ஆகி அப்பெயரே அக்குளத்தின் பெயராக நிலைத்ததாம். [ஷ]

## இவ்வாரம் எப்படி?

### மேடம்

குடும்பத்தில் சிறு பூசலின் பின் குதூகலம் தோன்றும். ஆயுக பீடைக்கும் எதிரிகளின் சச்சரவிற்கும் இடமுண்டு. உங்கள் நிலைதடுமாற வைக்கும் மாணவர்களாயின் நிதானம் அவசியம் உடல் நலமும் பாதிக்கப்படலாம்.

### இடபம்

சகோதரவழிச்சந்தோஷத்திற்கும் இடமேற்படலாம். பெரியோர் ஆதரவும் தக்க சமயத்தில் கிட்டும். ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்வீர்கள். கல்வித்துறையில் மகிழ்ச்சி தென்படும் தனவரவுமுண்டு.

### இன்று

மாதம்: சித்திரை
திகதி: 21(1986-05-04)
கிழமை: ஞாயிறு
திதி: ஏகாதசி மு.இ. வரை
நக்ஷத்திரம்: பூரட்டாதி பி. இ வரை

### மிதுனம்

தாய்வழிப்பெருமையும் அவ்வழி ஆதரவு முண்டாம். உயர்கல்வியிலும் முன்னேற்றம் காணப்படும். சிந்தையில் தடுமாற்றம் ஏற்படும். சுகாதாரம் வேண்டும். நீண்ட நாள் பிணி நீங்க இடமுண்டு. அவசரப்போக்கையும் ஆத்திர உணர்ச்சியையும் தவிர்க்கவும்.

### கடகம்

புதியபாதை திறக்கும். புத்திரமகிழ்ச்சி பிறக்கும். பந்துக்களின் ஆதரவும் கிடைக்கும் இன்பத்தின் ரேகைபடரும். இல்லத்திலும் மகிழ்ச்சியுண்டு. சிலருக்கு உஷ்ணரோகமும் தென்படலாம்.

### சிங்கம்

தூரத்துப்பயணம் ஒன்று துயரத்தைத்தரலாம். வருமானததில் வீழ்ச்சி தென்படும். வைத்தியச்செலவிற்கும் இடமுண்டு. உறவாடிக் கெடுப்பதற்கும் பகையாளிகள் வருவர் முதலீடுகளைத் தவிர்க்கவும். குடும்பத்திலும் குறை கேட்க நேரிடும்.

### கன்னி

மகிழ்ச்சி தேடிவரும். களஸ்திர வழியாலும் நன்மை பிறக்கும். பிறர் ஒத்துழைப்பும் கிட்டும். சமயோசித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம் காதலர்கள் வாழ்விலும் வரவிலும் முன்னேற்றம் பேச்சாளர் மத்தியிலும் புகழ்பரவும்.

### துலாம்

சிறு விபத்தும் ஏற்படலாம். நிதானத்துடன் செயல் படவும். உடல் நலம் பாதிக்கப் படலாம், பெண்கள் மிகவும். அவதானமாக நடந்து கொள்ளவும் கடன் தொல்லைகளும் அதிகரிக்கும். குருவின் உபதேசம் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமையும்.

### விருச்சிகம்

பிதாவழியிலிருந்து மகிழ்ச்சிகரமான செய்திகிட்டலாம். நீண்ட நாள் மனக்குறை நிவர்த்தியாகலாம் பொது மக்கள் ஆதரவும் கிடைக்கும். புண்ணிய யாத்திரையும் செல்ல நேரிடலாம்.

### தனுசு

வெற்றிப்பாதையில் வீறு நடை போடுவீர்கள் தொழிற்துறையில் புதிய உற்சாகம் பிறக்கும். திடீரென வரும் வருவாயால் கடன் தொல்லை நீங்கலாம் மாணவர்கள் சிந்தித்துச் செயல் படவும்.

### மகரம்

பெரியோர் புகழ்ச்சியும் பொருளும் கிட்டும். குடும்பத்திலும் மகிழ்ச்சிக்கு இடமுண்டு. நீண்ட நாள் செய்தி கிடைக்கும், கைத்தொழில் புரிவோருக்கு நல்லவருவாய்க்கு இடமுண்டு. தீய சக்திகளும் உங்களைப் பல வழிகளிலும் வீழ்த்தப்பபாக்கும்.

### கும்பம்

தனவரவு உங்களை மகிழ்விக்கும் பந்தபாசம் உங்களை மகிழ்விக்கும் பகைபட்டம் தோன்றும். பதட்டமும் உடன் சேரும். குழந்தையொன்றின் முன்னேற்றம் மகிழ்ச்சிதரும்.

### மீனம்

எண்ணியகாரியத்தில் கடைகள் சல உருவாகும். மேலதிகாரிகளின் கண்டிப்புக்கும் ஆளாவீர்கள் குடும்பப்பிணைப்புக்களும் இறுகும். தரும சிந்தை மலோங்கும். பிள்ளைகளாலும் உதவியுண்டு.

திருமலை
க.வே.ரவீந்திரன்

## மதிமுகராசாவை விடுதலைசெய்ய பொதுநிறுவனங்கள் கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

இனந்தெரியாத நபர்களால் அழைத்துச் செல்லப்பட்ட அ தி மு கழகப் பொதுச் செயலாளர் திரு. பொன் மதிமுகராசாவை விடுதலை செய்யக் கோரி அவர் பிறந்த ஊரான தாவடியைச் சேர்ந்த மத்திய சனசமூக நிலையம், கிராம அபிவிருத்திச் சங்கம், இளைஞர் விளையாட்டுக்கழகம், மின்சார அபிவிருத்திச்சபை, சைவஇளைஞர் சங்கம் ஆரம்ப சுகாதார நிலையம் ஆகிய ஆறு பொது ஸ்தாபனங்களும் சம்பந்தப்பட்டவர்களுக்கு வேண்டுதல் விடுத்துள்ளன

இவ் வேண்டுதல் அறிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தாவடியைச்சேர்ந்த பொன் மதிமுகராசா 25-4-86ம் திகதியன்று அ தி மு கழக யாழ். நகரக் காரியாலயத்திலிருந்து இனந்தெரியாத நபர்களால் அழைத்துச் செல்லப்பட்டார். இதுவரை விடுவிக்கப்படவில்லை.

சமூக சேவையாளரும், மக்கள் தொண்டருமான அவரது குடும்ப நிலையைக் கருத்தில் கொண்டு மனிதாபிமான அடிப்படையில் அவரை சம்பந்தப்பட்டவர்கள் விடுதலைசெய்யும்படிவேண்டுகிறோம்." [ஐ]

## பொதுத்தாதியர் உத்தியோகத்தர் சங்கம் செய்தி

[யாழ்ப்பாணம்]

"உலகெங்கும் 100வது மே தினம் கொண்டாடப்படும் இவ்வேளையில் தீர்க்கதரிசனத்துடன் செயற்படவேண்டும்"

இவ்வாறு அரசாங்கப் பொதுத்தாதியர் உத்தியோகத்தர்கள் சங்கம் தனது மே தினச்செய்தியில் உறுப்பினர்களைக்கேட்டுக்கொண்டுள்ளது.

செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"எமது இனம்இக்கட்டான நிலையில் உள்ளவேளையில், இன ஐக்கியம் உடையாது இருக்க இறைவனைப் பிரார்த்திப்போம் இலட்சியம் கொள்கை கட்டுப்பாடு கடமை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பிக்கப் பெற்ற மொழிவழித் தொழிற்சங்களின் வரிசையில்ஆரம்பிக்கப்

[11-ம் பக்கம் பார்க்க]


உங்கள் தேவையே எங்கள் சேவை
உங்கள் பணத்தை மிச்சப்படுத்துங்கள்

றொப்பலர் நிறுவனத்தின் விற்பனைப்பிரிவு விநியோகப் பெண்கள் உங்கள் வீட்டுப்பாவனைப் பொருள்களான உணவு, மருந்துவகைகள், அழகுசாதனப் பொருள்கள், சுத்திகரிப்புப் பொருள்கள் முதலியவைகளை உங்கள் வீட்டுப்படிகளிலேயே நகரத்திலும் பார்க்க குறைந்த விலையில் விநியோகம் செய்கிறுர்கள்.

மலர்ந்த முகத்துடன் உங்கள் வீட்டுக்குவரும் எமது பிரதிநிதிகளை வரவேற்று உற்சாகப்படுத்துங்கள். அவர்களிடம் பொருள்களை வாங்குவதால் போக்குவரத்துச் செலவுகள், இராணுவ கெடுபிடுகள், உடல்சலிப்பு முதலியவற்றிற்கு ஆளாகாமல் வீட்டில் உள்ளபடியே மிகுதிப்படுத்த முடியும். உங்கள் தேவைகளை எமது பிரதிநிதிகளிடம் அறியத் தாருங்கள். நாம் சிறந்த முறையில் அவற்றை விநியோகம் செய்ய முடியும்.

வாடிக்கையாளர்களே எமது நிறுவனத்தின் அதிபர்.

றொப்பலர் இன்ரநஷனல்,
(A-450) இல. 95, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எந்த நாட்டையும் கணப்பொழுதில் அடையலாம்!
நாளை முதல்....

சர்வதேச

# ரெலிபோன், ரெலெக்ஸ் சேவைகள்

பலரின் வேண்டுகோளுக்கிணங்க

**பாதுகாப்புமிக்க இடத்தில்,**

அமைதி தவழும் சூழலில் ஆரம்பம்
இரவு – பகல்

## 24 மணி நேர சேவை

(எல்லா நாட்களும்)

## MCT தரும் மேலதிக வசதி:

**சௌகரியமான படுக்கை அறைகள்**

திடீரென மாறும் சூழ்நிலைகளால் நீங்கள் வெளியேற முடியாத நிலை ஏற்படினும் பாதுகாப்பாகத் தங்கவும், இரவு நேரத்தில் ரெலிபோன் செய்பவர்கள் தங்கவுமென வசதியான மேல்மாடி அறைகள் அமைக்கப்பட்டுள்ளன.

### வெளிநாட்டுப் பிரயாணம்

துரிதமான ஒழுங்குகள்
சலுகைக் கட்டணங்களில் விமானச் சீட்டுகள்
Ticket Confirmations Reconfirmations
பாஸ்போட், விசா, பொன்ட் ஒழுங்குகள்
இந்தியப் பயணம்: விசேட வசதிகள்

வெளிநாட்டிலுள்ளவர்கள் எங்கள் தொலைபேசி எண்களைப் பயன்படுத்தி தாமாகவே உங்களுக்கு அழைப்புக்களை எடுக்கக்கூடிய வசதியையும் MCT வழங்குகிறது.

### ரெலிபோன் சேவை - ரெலெக்ஸ சேவை - பிரயாண சேவை

மூன்றையும் ஒருமித்து ஒரே இடத்தில் 24 மணிநேரமும்
ஓய்வின்றி வழங்கும் ஒரே நிறுவனம் - MCT



# MCT

# MACK COMMUNICATIONS & TRAVELS

இல. 8, முதலாவது ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

T. Phone: 24791, 24836

(A 475)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டிதமணி கணபதிப்பிள்ளை கையாண்ட மணிமொழிகள்

சட்டத்தரணி சி. பொன்னையா

பெரியோர் சம்பந்தம் பேரானந்தம். பேராசான் இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் தொடர்பை நினைக்குந்தோறும் எம்மனம் களிக்கின்றது! உயர்ந்த குணமுடைய சந்தன மரத்தைச் சுற்றியுள்ள மரங்களிலும் சந்தன மரத்தின் நறுமணம் படிகின்றது. அதுபோலவே பண்டிதமணியவர்களுடன் பழகியவர்கள் அவரின் தொடர்பினால் சிறு அளவினிலாகுதல் உள்ளம் வளப்பம் பெற்றிராது இருக்க முடியாது.

இலக்கியம், இலக்கணம், இதிகாசம், சமயம் முதலிய துறைகளில் சரிசமமாக அறிவு பெற்றவர்களைக் காணுதலரிது. இந்த நான்கு துறைகளிலும் பேரறிவு பெற்றுத் திகழ்ந்தவர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையவர்கள். அபாரமான மூளை வளம் படைத்தவர். அவரின் ஆய்வுத் திறனுக்குச் சான்றாக விளங்குவது அவரின் சமயக் கட்டுரைகள்; அதிலும் விசேடமானதும், சிகரமாக விளங்குவதுமான அவரின் சமயநூல்களான அன்பின் ஐந்திணை, அத்துவைத சிந்தனைக்களஞ்சியம் ஆகியவை.

பண்டிதமணியுடன் நெருங்கிப் பழகியவர்கள் அவர் கையாண்ட மணிமொழிகளை மறக்க முடியாது. ''புத்தியுள் இருக்கிறது உலகம்'' என்று அடிக்கடி சொல்லுவார். உலக சஞ்சாரத்தில் அமிழ்ந்தி அல்லலுறுவோர்க்கு கதிகாட்டுவதாக அமைந்துளது இந்த வாக்கியம். பேரவா கொண்ட மனிதர்கள் எங்ஙனம் ஆறுதல் பெறுவ! அவர்கள் ஊரூராய்த் திரிவர்! கடல் கடந்து போவர்! பொருள் திரட்டப் பொய்யும் பேசுவர்! யூகம் பல சூழுவர்! துஞ்சவும் மாட்டார்! அப்பப்பா! எத்தனை பொல்லாப்புக்கள்! இவர்களுக்கு நிம்மதி ஏது! இவர்களைப் பார்த்து ''மனிதர்காள்! ஏன் இத்தனை அலைச்சல்கள்! நீர்தேடும் பண்டங்கள் கழிவுப் பண்டங்களே! இவை உங்களுடன் வாராது! இவைகளைத் தேடி அலைவதை ஒழிமின்! இதுதான் புத்தியான வழி!'' என்று பண்டிதமணி கூறுவார்கள். கழிவுப் பண்டங்கள் என்று கூறுவதனாலே இவைகளைத் தேடுவதில் பெரும் சிரமத்தைத் தவிருங்கள் என்று சொல்லுவார். இதைப் பெரும்பாலும் பாமர மக்களுக்கே கூறுவர்.

ஆனால் இந்த மணி வாக்கியத்தையே சித்தாந்த மாணவர்களுக்கு ஒருபடி உயர்ந்து நின்று கூறுவார். சுத்தாசுத்தத்தின் காரியங்களான மாயை, காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன் என்னும் ஏழு தத்துவங்களும் மனிதனுக்கு ஒரு விளக்காக அமைந்துள்ளன. இவைகளின் தொழிற்பாடு அறிவைப் பிரகாசிப்பதற்கே இக்கருத்தை விஷேடமாக வைத்தே அவைகளை வித்தியாதத்துவங்கள் என்றும், இவைகளினாலேயே மனிதனுக்கு வாழ்க்கை விளக்கம் வரவுள்ளது என்றும் கூறி இதற்கு ஆதாரமாக ''விடிவாமளவும் விளக்கனைய மாயை'' என்னும் பெரும் வாக்கியத்தை விளக்குவார்.

இறைவனின் குணாதிசயங்களை விளக்கும்போது ''நிறுத்துவதோர் குணமிலான்'' என்பதை விஷேடமாக எடுத்துரைப்பார். ''இறைவன் எங்களுக்கு எல்லையில்லாத துன்பத்தைத் தருகின்றானே'' என்று பாமரசனங்கள் இறைவனைக்குறை கூறுவதை சுட்டிக்காட்டி இதெல்லாம் விளக்கமின்மையாலே நாம் இறைவனில் பிழை காண்கின்றோம் என்று பண்டிதமணி கூறுவார். உண்மையில் நாம் விதைப்பதையே அறுக்கின்றோம்; இறைவன் இதற்குப் பொறுப்பன்று. ஆனால் ''அவன் எங்களுக்குக் கூலியே தருகின்றான்'' என்று சொல்லுவார். ''இதைத்தான் செய்'' என்று சொல்வது கிடையாது. மனிதனுக்கு அளப்பரிய சுதந்திரத்தை இறைவன் அளித்துள்ளான். மனிதன் தன்னிச்சைப்படியே வாழ இடங்கொடுத்துள்ளான்; இதுதான் உண்மை.

இந்த வாக்கியத்துடன் இணைந்து ''ஓடிமீள்கென ஆடல் பார்த்திருப்பவன்'' என்று இறைவனுக்குரிய இன்னுமொரு பெருங்குணத்தையும் எமது ஆசான் கூறுவது வழக்கம். இந்த மணி வாக்கியத்திலும் இறைவன் நமக்கு வழங்கியுள்ள சுதந்திரம் தென்படுகின்றது. குதிரையில் சவாரி செய்பவன் குதிரைதான் நினைத்தவாறு போக இடங்கொடாது கையிலேந்திய நாண்களைதான் போக வேண்டிய இடத்துக்குப் போகும் வண்ணம் இழக்கியும் இழுத்தும் குதிரையை ஓட்டுகின்றான். சாரதி இவ்வாறன்றி, மனிதன் தன்னிச்சைப்படி செய்யவோ போகவோ நாண்களை எப்போதும் இழக்கிய வண்ணமேயிருக்கிறான் இறைவன். இந்த வாழ்க்கை நாண்களை இழக்கியும் இழுத்தும் தன்னைச் செம்மைப் படுத்தும் பொறுப்பு மனிதனுக்கே உரியது. இதுதான் உள்ள வேறுபாடு. இது மனிதன் அடையவேண்டிய ஒரு உன்னதமான நிலை.

''பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை'' என்னும் மணிவாசகரின் பாடலை அடிக்கடி பண்டிதமணியவர்கள் தமது மாணவர்களுக்கு விளக்குவது வழக்கம். சக்தியை வியந்தளவிலே நில்லாது, அதன் தத்துவத்தையும் அவர் விளக்கிக் கூறுவதுண்டு. வயிறு அசீரணமாயுள்ளது, பொருமியுள்ளது, ஓங்காளம் வருகிறது என்று நோயாளி கூறுமிடத்து மருத்துவன் பேதிமருந்து கொடுத்தும், வேறு மருந்துகளைக் கொடுத்தும் நோயாளியைக் குணமடையச் செய்கின்றான். அதுபோலவே சிவசக்தி ஆணவமலத்தின் அசிரணத்தால், அதன் பிடியினால் அலைப்புண்ட சீவனுக்கு வாழ்க்கைத் தத்துவங்கள் முப்பத்தாறையும், அதாவது அவைகளின் சங்கமமாகிய மனித சரீரத்தை வழங்கி உலக அனுபவங்களை நுகரச் செய்து, தவத்தினால், தீட்சையினால், உபதேசத்தினால் உணர்த்தி விட்டு ஆன்மாவைத்தன் அருட்கண் பார்வையினால் ஆட்கொள்ளுகின்றது.

தெள்ளிதின் விளக்கிய பண்டிதமணி இக்கருத்துக்களெல்லாம் சிவஞானபோதம் எட்டாம் சூத்திரத்தில் பொதிந்துள்ளன என்று சுட்டிக் காட்டுவார். அதுதான்:

''ஐம்புல வேடரின் அயர்ந்
தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த்
தவத்தினில் உணர்த்தவிட்டு
அன்னியம் இன்மையின்
அரன் கழல் செலுமே''

சீவன் சிவமாக விளங்குவதே அன்னியம் இன்மை என்பதின் பொருள். இதுவே அத்துவைதநிலை என்று எமது ஆசான் விளக்குவர்.

''உடம்பார் அழியில் உயி
ரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம்
சேரவும் மாட்டார்''

என்னும் திருமூலர் மந்திரத்தையும் எமது ஆசான் அடிக்கடி ஞாபகமூட்டுவார். எமது வாழ்வில் நல்லனவற்றைச் செய்வது தான் உயர்ந்த குறிக்கோள். அதுபோலவே உடலுக்கும் நல்ல உணவை, அதாவது மாறுபாடில்லாத உணவை, ஊட்டுவதுதான் மேலானது ஒன்றன் உடற்சுவை உண்பவன் எங்ஙனம் ஆளும் அருள் என்று வள்ளுவர் பெருந்தகை கேட்கின்றார். ஆகலினாலே, நற்சிந்தனைக்கு, தியானத்துக்கு, உயிருக்கு மாறுபாடில்லாத உண்டியே நாம் உட்கொள்ள வேண்டுமென்பது வெள்ளிடைமலை. ஊறு செய்யாது வந்த தூய உணவை அருந்தியவனின் உடலிலிருந்து மன்னுயிர்கெல்லாம் தண்ணளி செய்யும் அருள் சுரக்குமென்பதில் ஐயமில்லை.

நலம்புரி கொள்கையுடையவனுக்கு ஏகாக்கிரகசித்தம் கைகூடும். அவனே தியான வழிபாட்டில் நன்மையடைவான். இப்பக்குவத்தை அடைந்த ஒருவன் உலக பாசம் ஒருதடையாக இருப்பதைக் காண்கின்றான். யாழ்ப்பாணம் யோகசுவாமிகளைப் பற்றி பண்டிதமணி ஒருகதை சொல்லுவார். யோகசுவாமியவர்கள் ஒரு முறை தனது குடையை ஒரு கூடத்தின் வாயிற் கடையில் வைத்துவிட்டு உள்ளே தியானத்திலிருந்தார். சடுதியாக எழும்பி வெளியே சென்று தனது குடையை எடுத்து முறித்தெறிந்து விட்டு மீண்டும் உள்ளே சென்று நீண்ட நேரம் தியானத்திலிருந்தார். குடையின் கண் சென்ற சிந்தனை அவரின் தியானத்தைச் சிதைத்தது. தியானத்திற்குத் தடையாயிருந்த அந்தக் குடையை யோக சுவாமிகள் அகற்றி விட்டார் என்று பண்டிதமணியவர்கள் கூறுவார்கள்.

ஒரு ஆரம்ப மாணவனுக்கு சைவ சித்தாந்தம் இருள் செறிந்த ஒரு பெருங்காடு! பயங்கரமான விலங்குகள், பாம்புகள், பாரிய விருட்சங்கள், திரண்ட செடிகொடிகள் அடர்ந்திருக்கும் காட்டில் இருட்டு நேரத்தில் அகப்பட்ட ஒருவன் எங்ஙனம் தான் போகும் பாதையைக் கண்டு பிடிப்பது! ஆனால் பகலவன் உதயமாகி தன்பொன்னொளிக் கதிர்களைப் பரப்பும் வேளையில் அந்த மனிதன் எவ்வளவு ஆனந்தமடைகிறான். தான் வெளியே போகும்பாதையைக் கண்டு களிக்கிறான். சைவசித்தாந்தத்தில் நாம் காணும் தத்துவங்களெல்லாம் இருள் செறிந்த பெருங்காடாக எமக்

(8-ம் பக்கம் பார்க்க)

## ழகர, ளகர பேதம் மட்டுமே

'பாதுகாப்பு அளிக்கப்படுகிறது' என்கிறார்,
''ஏது காப்பு..?'' என ஏன் மக்கள் ஏங்குவார்!
பவனியாய் வருவதும் பாதுகாப்பு அளிக்கவாம்!
சிவனே என்றேன் செல்லர் சொல்கிறார்?
ஒழுங்கையால் வழுந்து ஏன் ஓட்டம் பிடிக்கிறார்?
வான்வழி வருவதும் பாதுகாப்பு அளிக்கத்
தானும் அந்தத் தருமரின் ஆட்கள்!
ஏனும் எங்கள் வீடுகள் இடியுது?
வானொலி மீண்டும் வடிவாய்க் கத்துதே
'பாதுகாப்பு அளிக்கப்படுகிறது' என்று!
காதை அடைக்குது! கண்கள் கூசுது!
ஏது நம் ஊர்களும் எரியுதென் அண்ணே!
பாதுகாப்பிலே அழிக்கப்படுகுதே
பேதம் அவ்வளவு பெரிதாய் இல்லையே
ழகர, ளகர பேதம் மட்டுமே
மவ்வழவ் கொம்புளவ்வாக,
மாறி ஒலித்தது வேறு பொய் இல்லையே!

— சத்தியசீலன்

# சிறுவரிடம் காணப்படும் மனோரீதியான குறைபாடுகள்

வைத்திய நிபுணர்
ஏ. செல்வரத்தினம்

சிறுவர்களிடையே மனோரீதியாகப் பல குறைபாடுகள் ஏற்படுகின்றன, இவைகளை நோய்கள் (Diseases என்று கருதக்கூடாது. ஆனால் அவற்றுக்குத் தகுந்த மனோதத்துவ நிபுணரின் ஆலோசனை பெறப்பட வேண்டும்.

### இரவில் பல்நறும்புதல்

இக்குறைபாடு அநேகமான சிறுவர்களிடம் காணப்படுகின்றது. இதற்குக் காரணம் வயிற்றில் பூச்சிகள் இருப்பதே என்று அநேகமான பெற்றோர் நம்புகின்றார்கள். ஆனால் உண்மைக்காரணம் அதுவல்ல. இதற்குச் சிகிசசை உண்டு.

பல்நறும்புதல் மிகவும் வேகமாக இருந்தால் பற்கள் தேய்ந்து போகும் அபாயம் ஏற்படுகிறது இதற்குப் பல் வைத்தியரிடம் ஆலோசனை பெற்று, அதற்குரிய தடுப்பு முறைகளைக் கையாள வேண்டும்.

### பயங்கரக் கனவுகள்

பயங்கரக் கனவுகள் சிலசிறுவர்களைப் பாதிக்கும். இதனால் அவர்கள் நித்திரையிலேயே மிகவும் அவஸ்தைப் படுவார்கள், சில நேரம் பயங்கரக் கூக்குரலிடுவார்கள். அதிகமாக வியர்க்கவும் கூடும். நித்திரையிலிருந்து தாய், தந்தையரினால் எழுப்பப்பட்டால் இவர்கள் தம்சுய நினைவை அடைந்து, தம்மு சூழ்நிலையைப் புரிந்து அமைதி கொள்வார்கள். கண்ட கனவு அடுத்தநாள் அநேகமாக ஞாபகத்தில் இருக்கும். இதற்கும் வைத்திய சிகிச்சை உண்டு.

### துயில் பயங்கரம்

இக்குறைபாட்டைக்காணும் பெற்றோர் மிகவும் அதிர்ச்சி அடையலாம். இது ஆழ்ந்த நித்திரையிலேயே ஏற்படுகிறது. இதனால் பாதிக்கப்படும் சிறுவர்கள், கற்பனையில் காட்சிகளையும், சப்தங்களையும் கேட்பார்கள். மிகவும் பயந்து கூக்குரலிட்டுக்கொண்டு அறையில் அங்குமிங்குமாக ஓடித் திரிவார்கள். இவர்களைச் சுய நினைவுக்குக் கொண்டு வரப் பெற்றோர் எடுக்கும் முயற்சிகள் சில நிமிட நேரங்களுக்கு வீண்போகின்றன. இவர்கள் உருக்கொண்டவர்கள் போல் [Trance] காட்சியளிப்பார்கள். இந்த நிகழ்ச்சியைப் பற்றி அடுத்தநாள் சிறிதும் ஞாபகம் இருக்காது. இதற்கும் வைத்திய சிகிச்சை உண்டு. ஆனால் வயது வளர வளரப் பயங்கரக்கனவுகளும், துயில் பயங்கரமும் தானே குறைந்து போய்க் காலகதியில் இவை யாவும் அற்றுப் போகும்.

### துயில் மூச்சடைப்பு

இக்குறைபாட்டினால் இரவில் மூச்சு விடுதல் குறையும் ஒரு சில விநாடிகளுக்கு மூச்செடுப்பதே நின்று விடும். இதனால் பாதிக்கப்பட்டவர் அடிக்கடி துயில் நீங்கி எழுவர். அத்துடன் குறட்டையும் விடுவர். இவர்கள் அநேகமாக அடுத்த நாட்காலையில் எரிச்சல் உள்ளவர்களாக இருப்பதுடன், தலைவலி இருப்பதாகவும் முறையிடுவார்கள். இக்குறைபாட்டினால் உயிருக்கு ஆபத்தே ஏற்படலாம் சுவாச உறுப்புக்களில் ஏதேனும் வித்தியாசமிருப்பதே இதற்குக் காரணம். மனோ வைத்திய ஆலோசனையின் பின், தேவையானால் சத்திர சிகிச்சைக்கான அவசியமும் ஏற்படலாம். இக்குறைபாடு இருந்தால் நிபுணத்துவ வைத்திய ஆலோசனை மிகவும் அவசியம்.

### படுக்கையில் சிறுநீர் கழித்தல்

படுக்கையில் சிறுநீர் கழித்தல் இரண்டு வகைப்படும். முதலாவது சிறுவயதிலிருந்தே நித்திரையில் சிறுநீர் கழிப்பது இது ஆரம்பநிலை எனப்படும். அடுத்தது சாதாரணமாக இப்பழக்கம் விட்டொழிந்தபின் இரண்டாவது முறையாக ஏழு அல்லது எட்டு வயது மட்டில் ஆரம்பமாகும். இதனை இரண்டாவது நிலை என்பார்கள் பொதுவாக ஐந்து வயது வந்தபின் துயிலில் சிறுநீர் கழிப்பது ஒரு குறைபாடாகவே கருதப்பட வேண்டியது. ஆண் பெண் விகிதாசாரப்படி மூன்று அல்லது நாலு சிறுவர்களுக்கு ஒரு

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் எலுமிச்சை பயன்தரவில்லையா?

எலுமிச்சைம் பழம் எமது இல்லங்களில் அன்றுடம் பயன்படுத்தப்படும்பொருள்களில் ஒன்று. உணவுக்காக மட்டுமன்றி மருத்துவ தேவைக்காகவும் எலுமிச்சம் பழம் பயன்படுகிறது, பழம் மட்டுமன்றி அதன் இலையும் வேரும் கூடப்பயன்படுகின்றன.

சில தினங்களுக்கு முன் சுமார் ஐந்து ரூபாய் வரை சந்தையில் எலுமிச்சம்பழம் விலைபோனது. இப்போது இதன் விலை சற்று இறங்கியுள்ளது.

நமக்கு மிகவும் அவசியமான இந்த எலுமிச்சம் பழத்தைச் சந்தையில் பெற்றுக் கொள்வதைத் தவிர்த்து நமது கொல்லையிலேயே அதனைப்பெற்றுக் கொள்வதற்கு நாம் முயலவேண்டும். எலுமிச்சையை எப்படி உற்பத்தி செய்வது, பேணுவது, பயன்பெறுவது என்பனபற்றி இக்கட்டுரை விளக்குகிறது.

எஸ். பேரின்பநாதன்
(விவசாய போதனாசிரியர், திருநெல்வேலி)

எமது காரியாலயத்துக்கு வரும் பலர் தமது எலுமிச்சை மரங்கள் காய்ப்பதில்லையென்றும் சில மரங்கள் போதியளவு காய்களை தருவதில்லை யென்றும் பல விதமான நோய்களால் பீடிக்கப்பட்டிருப்பதாகவும் கூறுகின்றார்கள்.

எமது கணிப்பின்படி யாழ். மாவட்டத்தில் 31920 எலுமிச்சைமரங்கள் இருக்கின்றன. (66 5ஹெக்டரில்) இவைபெருந்தோட்டப்பயிராக இல்லாமல் வீட்டுத் தோட்டப்பயிராகவே காணப்படுகின்றது. யாழ். மாவட்டத்தில் இருக்கும் எலுமிச்சமரங்களுக்கு முறையான பராமரிப்பு இல்லாதபடியால் தான் நல்ல பயனை பெறமுடியாமல் இருக்கின்றது. இவற்றுக்கு நல்ல பராமரிப்பு கொடுத்தால் நல்ல பயனை நாம் இலகுவாக பெறலாம்.

## பராமரிப்பு முறை

நல்ல வீரியமான நாற்றுக்கள் நாட்டப்படவேண்டும். நல்ல தாய் மரங்களிலிருந்து பெறப்பட்ட விதைகளைக் கொண்டு உற்பத்தி செய்யப்பட்ட வீரியமான நாற்றுக்கள் நாட்டப்படவேண்டும். இவற்றின் விதைகள் பலமுளையம் கொள்பவையாகும். (Poly embryo) இதனால் தாய் மரத்தின் குணதிசியங்களைக் கொண்ட நாற்றுக்களை அரசாங்க பண்ணைகளிலும் விவசாய திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நாற்று உற்பத்தியாளர்களிடம் மட்டுமே நல்ல வீரியமான நாற்றுகளை பெறலாம். நல்ல வீரியமான நாற்றுகளைப்பெற அப்பிரதேச விவசாய போதனாசிரியர்களை நாடவும்.

## உரியமண் தெரிவு செய்தல்

இப்பயிர் ஆழமான மண்ணிலே செழித்து வளரும். சகதியான மண்பிரதேசத்தையும் 4 அடி ஆழத்தில் நீர் வரும் பிரதேசங்களையும் வடிகால் குறைந்த மண் பிரதேசங்களையும் கற்பாறை நிறைந்த இடங்களையும் தவிர்க்க வேண்டும்.

## சூரிய வெளிச்சமும் கத்தரித்தலும்

மரங்கள் நல்ல சூரியவெளிச்சம் படும்படியான இடங்களில் நாட்டப்படல்வேண்டும். ஏற்கனவே நாட்டப்பட்ட மரங்களுக்கும் போதிய சூரிய வெளிச்சம் படும்படி செய்ய வேண்டும். இதற்காக அடர்த்தியான கொப்புகளையும், செத்த கொப்புகளையும், பச்சகிளைகளில் தோன்றும் நீர் வாதுக்களையும் கத்தரிக்கப்படல் வேண்டும். மரத்தின் அடியிலிருந்து 1½ அடி 2 அடி உயரம் வரை உண்டாகும் கிளைகளையும் வெட்டி விடவும். தேவையில்லாத கொப்புகளை கத்தரிக்கும் போது அவை மரத்தோடு ஒட்ட வெட்டப்படவேண்டும். சிறு கொப்பை விட்டு வெட்டினால் இதன் மூலம் பங்கசு உட்போவதற்கு இடமுண்டு. வெட்டிய காயங்களுக்கு ஒரு பங்கசு நாசினியை பூசலாம். இதற்கு இலகுவாக செய்யப் கூடிய போடோ கலவை பசை விரும்பத்தக்கது.

## மரங்களுக்கு இளமை உணர்ச்சி ஊட்டுதல் (Rejuwanation work)

முக்கியமாக 10 வருடங்களுக்கு கூடிய மரங்களுக்கு நாம் ஒரு இளமை உணர்ச்சி செய்யவேண்டும். இம்மரங்களை நன்றாக அவதானித்து தண்டிலும் கொப்புகளிலும் தென்படும் பாசி முதலியவற்றை ஒரு துணி மூலம் துடைக்க வேண்டும். அத்தருணம் இவற்றிலிருந்து பட்டை வெடித்து பிசின் வடியும் பிரதேசங்களையும் செத்த பட்டைகளையும் கூரிய கத்தியின் மூலம் துப்பரவு செய்து ஒரு பங்கசு நாசினியை ஒரு தூரிகை மூலம் பூசவேண்டும். இதற்கு போடோ கலவைப்சை விரும்பத்தக்கது. மேலும் 5 முதல் 10 வருடத்துக்குக் கூடிய மரங்களுக்கு வருடத்தில் ஒருமுறை முழுமரத்தின் தண்டுக்கும், கொப்புகளுக்கும் போடோ கலவை பசையை பூசுவதன் மூலம் பங்கசு நோய்களிலிருந்து மரங்களை நாம்காபாப்பாற்றலாம்.

## போடோ கலவை பசை செய்யும்விதம்

தேவையான பொருட்கள்:- செப்புசல்பேற் (Copper Sulphate) -1 இரு, சுண்ணும்பு 4 இரு, பசைக்கு தேவையான நீர்.

செப்புசல்பேற்றை நன்றாக அரைத்து போதியளவு நீரை ஊற்றி கரைத்து புறம்பாக வைக்கவும். பின்பு சுண்ணும்புக்குள் வேறாக பசைத்தன்மையாக வரும் வரை நீரை ஊற்றி வேறாக கரைக்கவும். ஏற்கனவே கரைத்த செப்புசல்பேற்றை சுண்ணும்பு கலவையின் உள் ஊற்றவும். இவை பசைத்தன்மையாக வரும் வரை நீரை ஊற்றறி கலக்கவும் இக்கலவையை பொட்டசு மட்டையின் உதவியோடு செய்யப்பட்ட தூரிகை மூலம் முழு மரத்துக்கும்பூசவும். உங்களின் மரத்தின் எண்ணிக்கையின் படி உங்களுக்குத் தேவையான போடோ கலவை பசையை மேற் கூறிய பிரமாணத்தின் படி தயாரிக்கவும்.

## பசளைப்பிரயோகம்

மரங்களுக்கு போதியளவு பசளை இடல் வேண்டும். விவசாய திணைக்களத்தினால் சிபார்சு செய்யப்பட்ட பின் வரும் பசளையை கொடுக்கலாம். இளம் பயிருக்கு (காய்க்க ஆரம்பிக்க முன்) 16: 20: 12 என்: பி: கே: கலவையில் குழி யொன்றுக்கு 225 கிராம் வீதம் இட்டு மண்ணுடன் நன்கு கலந்து விடவும். அடிக்கட்டு பசளையாககுழியொன்றுக்கு இரண்டு 2] கூடை சேதனப்பசளை நடும் பொழுது இடவும்.

மேற்கட்டுபசளை: 16: 20: 12 என். பி கே. கலவையில் முதலாவது வருடம் 225 கிராம் இட்டு பின் ஆண்டொன்று 225 கிராம் வீதம் அதிகரித்து மரமொன்றுக்கு ஆகக் கூடியது 1350 கிராம் இடவும்

யூரியா - 10 கி. கிறும் சுப்பர் போஸ்பேற் - 23 கி. கிராம் மியூறியேற் ஒப் பொட்டாஸ், - 17 கி. கிராம் என்றளவில் கலப்பதன் மூலம் மேற் கூறிய கலவையில் 50 கி. கிராம் பெறலாம். உங்களின் மரத்தின் எண்ணிக்கையின் படி உங்களுக்குத் தேவையான பசளையை தயாரிக்கலாம்.

காய்க்க ஆரம்பித்தபின் 9: 21: 20 என். பி. கே கலவை மரமொன்றுக்குஆண்டொன்று 1350 கிராம் இடவும். இதனை இரண்டாக பிரித்து வருடத்தில்இருமுறை இடல் நல்லது. யூரியா 18 கி. கிறும், சுப்பர் போஸ்பேற் 22 கி. கிறும், மியுறியேற் ஒப் பொட்டஸ் - 10கி. கிறும் என்றளவில் கலப்பதின் மூலம் மேற் கூறிய கலவையில் 50 கி. கிறும் பெறலாம். பசளைபோட முன் மரங்களை சுற்றவுள்ள களைகளை பிடுங்கவும். மரத்திலிருந்து ஒரு அடிக்கு அப்பால் மரத்தை சுற்றி நண்பகலில் நிலத்தில் நிழல்படும் பகுதிகளில் பசளையை இட்டு மண்வெட்டியால் வேரைகாயப்படுத்தாமல் மண்ணுடன் கலந்து விடவும். ஈரம் இல்லாவிட்டால் நீர்ப்பாசனம் செய்யவும் செயற்கை உரப்பசளையுடன் இயற்கைப்பசளைகளான மாட்டெரு, கூட்டெரு முதலானவற்றையும் ஓர் மரத்துக்கு 3 — 4 கூடை வீதம் இடல் வேண்டும். இலைகளில் நிறமாற்றம் தென்பட்டால் இதற்கு திரவபசளை விசிற வேண்டும் இதற்கு [டேவோலன்] மக்சிகுறப், கொம்பிளசால், நியுற்றுபொஸ், சோபாஸ்பிறே போன்ற திரவபசளைகளை பாவிக்கலாம்.

## நோய் பிடை பராமரிப்பு

நட்ட இளம் நாற்றுகளிலும் பெரியமரங்களிலும் இலைகளைத் தின்னும் பச்சை நிற மயிர்கொட்டிபுழு மிகவும் பாரதூரமான தாக்கத்தை ஏற்படுத்தும். இது ஒறேஞ்டோக் என அழைக்கப்படும். இது ஒரு 12 மணித்தியால இரவில் இளம் தளிர்கள் முழுவதையும் சாப்பிட்டுவிடும். கடைசியாக கொப்புகள் மட்டும் மிஞ்சும். இவ்வற்றை அழிப்பதற்கு நாம் மோனகுரோட்ட போஸ் அல்லது பென்தியோன் விசிறலாம். மேலும் இவற்றை அழிப்பதற்கு நாம் ஒவ்வெருநாளும் பின்நேரங்களில் ஒருவர் மூலம் மரத்தின் இலைகளை பரிசோதித்து மறைந்திருக்கும் புழுக்களை கையால் பிடித்து அழிப்பது மிகவும் நல்ல முறையாகும்.

## இலை சுரங்கப்புழு

இளம்குருத்துகளை தாக்கும். ஏற்கனவே தாக்கமுற்ற இலைகளை நிவர்த்தி செய்ய முடியாது. புதிதாக வரும் இளம் தளிர்களை இலைசுரங்கப்புழு தாக்காமல் டைம்தோயேற் விசிறவும்.

## கிச்சிலி புற்றுநோய்

இதுகாய்களிலும் இலைகளிலும், கிளைகளிலும் வெடிப்புகளை ஏற்படுத்தும். இவற்றிற்கு செப்புபங்கஸ் கொல்லி விசிறுவதால் கட்டுப்படுத்த முடியும்.


## நீர்ப்பாசனம்

கோடைகாலங்களில் 5—7 நாட்களிற் கொருமுறை நீர்பாசனம் கட்டாயம் செய்யப்படல் வேண்டும் மேலும் ஈரலிப்பு கூடினாலும் நோய்கள் தென்படும் இதனால் நீர்ப்பாசனம் செய்யும் போது நிலம் சகதியாக இருக்கவிட வேண்டாம்.

## பூச்சிகள், நோய்கள் கட்டுப்படுத்தல்

கிளைகளைக் கத்தரித்தல் பசளைபாவித்தல் போன்ற புதியமுறைகளை எலுமிச்சைச் செய்கையில் அதன் உற்பத்தியை பெருக்குவதற்கு நாம் முயற்சி செய்தாலும் நல்ல நீர்ப்பாசனம் செய்யாவிட்டால் நல்ல உற்பத்தியைப் பெறமுடியாது. நன்கு பரா

(8-ம் பக்கம் பார்க்க)



# நாடோடிக் கதைகள்

தமிழில்: நீர்வை பொன்னையன்

## தார்மீகவாதி

தான் நேர்மையானவன், புனிதமானவன் என்று பிறருக்குக் காட்ட விரும்பினான் ஒரு அதிகாரி.

''எனது வலது கைலஞ்சம் வாங்கினல் அழுகிச் சிதைந்து போகட்டும்; எனது இடது கை கைலஞ்சம் பெற்றால் அதுகூட அழுகிச் சிதைந்து போகட்டும்''.

பதவி ஏற்கமுன் அந்த அதிகாரி மக்களின் முன்நிலையில் சத்தியப்பிரமாண மெடுத்தான்.

சிறிது காலத்தின்பின் ஒருவன் நூறுவெள்ளி நாணயங்களை லஞ்சமாகக் கொடுக்க முன்வந்தான். அந்த அதிகாரி அதை ஏற்க விரும்பினான். ஆனால் தனது சத்தியம் பலித்து விடுமென்று அஞ்சினான்.

''இந்தப் பணத்தை மாண்புமிகு தங்களின் சட்டைக்கைப் பகுதிக்குள் ஏன்பெற்றுக்கொள்ளக் கூடாது. அப்படித்தங்கள் சத்தியம் பலித்தால் சட்டையின் கைப்பகுதிதானே சிதைவுற்றுப்போகும்.''

அந்த அதிகாரியைச் சிக்கலிலிருந்து விடுவிப்பதற்கான யுக்தியைச் கைலஞ்சம் கொடுக்க முன்வந்தவன் கூறினான்.

அந்த ஆலோசனை சிறந்ததென்று ஏற்றுக்கொண்டு கைலஞ்சத்தை மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டான் அந்தத் தார்மீகவாதி.

## யதார்த்தவாதி

சண்டையிடுகின்ற இரண்டு மாடுகளின் படத்தைத் தலைசிறந்த ஓவியன்ஒருவன் தீட்டிக் காட்சிக்கு வைத்திருந்தான்.

அந்த ஓவியத்தைப் பார்த்த எல்லோரும் பாராட்டினர்.

''பாருங்கள்! எவ்வளவு உற்சாகமாக அவை தோன்றுகின்றன. உண்மையில் அவை உயிருள்ள எருதுகளைப் போலக் காட்சியளிக்கின்றன.''

ஒரு பார்வையாளன் புகழ்ந்தான். ஓவியனுக்கு உச்சி குளிர்ந்தது. அவன் மிக அரிதான பட்டுத்துணியில் அந்த ஓவியத்தைப் பொருத்தி ரத்தினக்கற்கள் பதித்த தடிகளில் தொங்கவிட்டதுடன் தேவதாரு மரப்பெட்டியில் அதை அடைத்து வைத்திருந்தான்.

அந்த தலைசிறந்த சிருஷ்டியை ரசிக்கக் கூடியவர்களைத் தவிர வேறு எவருக்கும் அவன் அந்த ஓவியத்தைக் காட்டுவதில்லை.

புழு பூச்சிகள் அதை அரித்துத் தின்பதைத் தவிர்ப்பதற்கான முன்எச்சரிக்கையாக வெய்யிலில் அதைத் தொங்க விட்டிருந்தான்.

அப்பொழுது ஒரு மாடு மேய்க்கும் சிறுவன் வந்து அந்த ஓவியத்தைப் பார்த்துச் சிரித்தான்.

''சிறுவனே, ஓவியத்தைப் பற்றி உனக்கு ஏதாதது தெரியுமா?'' ஓவியன் கேட்டான்.

''இந்த எருதுகளைப் பற்றி நீ என்ன நினைக்கின்றாய்? அவைகள் உயிருள்ள எருதுகளைப் போலில்லையா?''

கேட்டுவிட்டு கரிசனையுடன் சிறுவனை நோக்கினான் ஓவியன்.

''அவைகள் எருதுகளைப் போல இருக்கின்றன''

சிரித்துக்கொண்டு கூறினான் சிறுவன்.

''இந்த ஓவியத்தில் ஏதாவது தவறு இருக்கின்றது என்று உனக்குத் தோன்றுகின்றதா?''

''எருதுகள்பொருதி, தங்கள் கொம்புகளால் முட்டி மோதிக் கொண்டிருக்கும் வேளையில் தங்கள் வால்களைத் தமது பிட்டத்துடைகளுக்கிடையில் அவை செருகி வைத்துக் கொண்டிருக்கும். இப்பொழுது இந்தப் படத்தில் அவை தங்கள் வால்களை மேலே தூக்கி விசிறிக்கொண்டிருக்கின்றன. இதற்கு முன்பு இப்படி எருதுகள் இடிபடுவதை நான் ஒருபொழுதும் பார்த்ததில்லை''.

இதற்கு அந்த தலைசிறந்த ஓவியனால் ஒரு பதிலும் கூற முடியவில்லை.

## மரபு

புதிதாக நியமனம் பெற்ற ஓர் உயர் அதிகாரி உள்ளூர்ப் பிரமுகர்களையும் அநேக இசைக் கலைஞர்களையும் உபசரிக்க ஒரு பெரிய விருந்தை வைத்தான். கேளிக்கை உச்சக் கட்டத்தை நோக்கிச் சேன்று கொண்டிருந்தது.

''பழமை ஒழிந்து போகட்டும், புதுமையே வருக. தீய தாரகை ஒழிந்து போகட்டும். அதிர்ஷ்டதாரகையே வருக வருகவே''!

ஒரு பாடகன் இசையுடன் பாடினான்.

அதிகாரிக்குத் தலைகால் தெரியாத மகிழ்ச்சி.

''இந்தப் பாடலை யார் புனைந்தார்கள்?''

— அதிகாரி கேட்டான்.

''ஒரு புதிய அதிகாரி வரும்பொழுது இப்படிப்பாடுவது எமது பட்டினத்தில் தலைமுறை தலைமுறையாக வந்து கொண்டிருக்கும் ஒரு பழைய மரபு''.

அதிகாரிக்கு விளக்கெண்ணெயைக் குடித்தது போலிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர் நவீனம்

# இருள் இரவில் அல்ல

★ இணுவையூர்
சிதம்பரதிருச்செந்திநாதன்

வசந்த மலருக்கு புதுவிதமான உறுதி பிறந்திருந்தது. புருஷன் செத்துப்போய் சில நாட்களுக்குள்ளேயே அக்கம் பக்கத்தில் இருப்பவர்கள் ஆறுதல் சொல்லுகின்றேம் என்ற போர்வையில் அவளது வேதனையை கிளறி விட்டதனுல் அந்த வேதனையின் ஊடே ஒருவித வைராக்கியம் உருவானது.

வசந்தமலர் சிலவேளை திரும்பவும் கலியாணம் முடிப்பாள் என்று சிலர் பேசிக் கொண்டார்கள். வீட்டுக்காரரை எதிர்த்து கந்தமூர்த்தியுடன் ஓடிவந்தவள்தானே. திரும்ப கலியாணம் செய்ய மறுக்கப் போறுளே? எனவும் வேறுசிலர் கருத்துத் தெரிவித்தார்கள்.

இந்த விடயங்களை வெளியில் கதைத்தவர்களே வசந்த மலரிடம் வந்து யாரோ இப்படி கதைப்பதாகவும் தாங்கள் பேசிப்போட்டு வாறம் என்று சொல்லுவதைக் கேட்க வசந்தமலருக்கு வேடிக்கையாக இருந்தது.

தாங்கள் இப்படி சொன்ஞல் பதிலுக்கு வசந்தமலர் என்ன சொல்கின்ருள் என்பதைக் கேட்டுக் கொண்டு போய் தாங்கள் கதைத்த வசந்தமலரின் கலியாணக்கதையை விரிவு படுத்தலாம் என்பது அவர்களது எண்ணமாகும்.

ஆனுல் வசந்தமலர் அவர்களது பேச்சுக்கு பதில் ஏதும் கூறவில்லை. அந்த பேச்சினை அவள் வளர்க்கவே விரும்பவில்லை. இது அந்தப் பெண்களுக்கு ஏமாற்றத்தைக் கொடுத்தது.

இவ்வாறுன ஓர் நிலைமையில் தான் அவள் குடியிருந்த வளவுக்காரி மங்களாம்பிகை வீட்டினுள் வந்தாள்.

தான் குடியிருக்கும் வளவின் சொந்தக் காரியான மங்களாம்பிகையைக் கண்டதும் வசந்தமலர் எழுந்து சென்று அவளை எதிர் கொண்டாள். மங்களாம்பிகை வந்து திண்ணையில் அமர்ந்தாள்.

''எப்படி வசந்தமலர் இனி என்ன செய்வதாக உத்தேசம்'' என்று மங்களாம்பிகை கேட்டாள்.

''அதுதான் எனக்கும் தெரியவில்லை என்னமாதிரி என்வாழ்க்கையைக் கொண்டு நடாத்துவது என்பது புரியவும் இல்லை'' ''உப்பிடி யோசித்தால் என்ன பிரயோசனம் தனிய இருந்தால் யார் சாப்பாட்டுக்கு வழிசெய்வார்கள். உனக்கு பிள்ளை ஒன்றும் இருக்கு அதையும் வளர்க்க வேண்டும்''

''அது உண்மைதான் ஆனுல் என்ன செய்வது என்று தான் எனக்கு விளங்கவில்லை'' என்று வசந்தமலர் கூறும் போது அவள் கண்கள் கலங்கின.

''இஞ்சைபார் வசந்தமலர் நான் வந்த விஷயத்தை சொல்லுறன் எனக்கு இந்தக் காணி அவசரமாக தேவையாக இருக்கிறது. நீங்கள் இப்ப கொஞ்சக்காலம் மாதம் மாதம் தாறகாசையும் தரேல்லை. அதுதான் கஸ்டப் படுறியள் என்று பேசாமல் விட்டனுன். முந்தி உன்ரை புருஷன் இருக்கேக்கை அவன் எப்பிடியும் உழைச்சு மொத்தமாய் கட்டிப்போடுவன் என்று நினைத்தன் இப்ப நீ தனிச்சுப் போனுய். நீ எப்பிடி என்ரை கடனை அடைப்பாய். உன்னைப் பார்க்கவே உன்னுலே முடியாமல் இருக்கு. அப்படியிருக்க எனியும் என்னுல் பொறுக்க முடியாது'' என்றுள் மங்களாம்பிகை.

அவள் கூறியதைக் கேட்ட வசந்தமலர் தனக்கு எந்த விதமான அதிர்ச்சியும் ஏற்பட்டதாக காட்டவில்லை.

''நீ என்ன சொல்லுகின்ருய் வசந்தமலர்''

''நான் என்னத்தை சொல்லுறது. நீங்கள் சொல்லுறதில் ஏதும் தவறில்லை. எனக்கு என்னை வழிநடத்தவே பிரச்னையாக இருக்கப்போகுது. பிறகு எப்படி உங்கடை காணிக்க இருந்து கொண்டு உங்களுக்கு வாடகை தாறது. அது என்னுல் முடியாது தான்''.

''அப்ப நீ என்ன சொல்கிருய்''

''நான் எப்பிடியும் இரண்டு கிழமைக்குள் உங்கடை காணியை விட்டிட்டு எழும்பிறன். நீங்கள் இவ்வளவு நாளும் விட்டிட்டு இருந்ததே பெரிய உதவி'' என்றுள் வசந்த மலர்.

''அதுக்கு''

''காணியை விட்டு எழும்ப சொல்லியிருக்கிரு.''

''அட ●குறுக்கால போவாளே காணியை விட்டு எழும்பி நீ என்னவாம் செய்யிறது கொஞ்சம் தன்னும் மனுசத்தன்மையில்லாத மனிசியாக இருக்கிறதே.'' என்று தங்கலட்சுமி கூறினுர்.

தான் வந்த விடயத்திற்கு ஆதரவாக ஒரு சம்பவம் நிகழ்ந்து விட்டது. என்ற தொனிப்பு அவள் குரலில் தென்பட்டது.

ஆனுல் கந்தையருக்கு உண்மையில் வேதனையாக இருந்தது. புருஷன் செத்தவுடன் வீட்டையும் விட்டல்லவா துரத்துகிருர்கள். இந்தப் பெட்டை தனிய என்ன செய்வள் என்ற யோசனை கொஞ்சம் கூட இல்லைத்தானே என தன்னைத்தானே கேட்டுக் கொண்டார்.

''நான் ஒன்றும் செய்ய முடியாது வசந்தமலர் எனக்கும் உன்னை இந்தக் காணியில் இருந்து எழுப்புறது மன வருத்தம் தான் ஆனுல் காணி அவசரமாக தேவையாக இருக்கிறதே அதாலதான் இப்படி செய்ய வேண்டியிருக்கிறது. நீ என்னை குறை நினைக்கக் கூடாது.''

''நான் ஏன் உங்களை குறை நினைக்கப் போறன். அப்படி நான் நினைத்தால் அதை கடவுள் கூட பொறுக்க மாட்டார்'' என்று வசந்தமலர் சொன்ஞள்.

அந்த சமயத்தில் படலையை திறந்து கொண்டு கந்தையரும் தங்கலட்சுமியும் உள்ளே வந்தார்கள்.

''வாங்கோ மாமி வாங்கோ அப்பு'' என அவர்களை வரவேற்க அவர்கள் இருவரும் வந்து திண்ணையில் அமர்ந்தார்கள்.

''அப்ப நான்போட்டு வாறன், வசந்தமலர். என்ன மாதிரி என்று கெதியாக சொல்லி அனுப்பு'' என்று சொல்லியவாறு திண்ணையை விட்டு எழுந்தாள் மங்களாம்பிகை.

''ஓம் கட்டாயம் கெதியில் சொல்லி அனுப்பிறன், நீங்கள் கவலைப்படாதேங்கோ'' என்று கூறி மங்களாம்பிகையை வழி அனுப்பி வைக்க முற்பட்டாள் வசந்தமலர்.

''நீங்கள் வந்தவுடன் நான் போறன் என்று குறைநினையாதேங்கோ, எனக்கு கொஞ்ச அவசர அலுவல் இருக்கு'' என்று கந்தையரிடமும் தங்கலட்சுமியிடமும் சொல்லி விட்டு புறப்பட்டு போனுள் மங்களாம்பிகை.

''சீச்சி நாங்கள் ஏன் அப்பிடி நினைக்கப் போறம்'' என்றுள் தங்கலட்சுமி பிறகு மெதுவான குரலில் ''எனக்கு உவவைத் தெரியாதே தான் ஏதோ கவண்மென்ட் ஏஜன்ட் பெண்சாதி என்ற நினைப்பு அவவுக்கு'' என்று சொன்ஞள் பிறகு ''ஏன் பிள்ளை உவ வந்திட்டுப்போனு'' என்று தங்கலட்சுமி வசந்த மலரிடம் கேட்டாள்.

''இது அவவின்ரை காணி தானே''.

நல்ல காலம் தான் முயற்சி செய்து தங்கலட்சுமியை கூட்டிக்கொண்டு வந்ததை அவர் அப்போது நினைத்துக் கொண்டார். எப்பிடியும் வசந்தமலரை தங்கலட்சுமியின் பொறுப்பில் சேர்த்து விட்டால் அவள் கஷ்டத்தில் இருந்து விடுபட்டு விடுவாள் எனவும் அவர் நினைத்தார்.

''மாமி அப்பிடிச் சொல்லாதேங்கோ அவ இவ்வளவு நாளும் பேசாமல் தானே

7

இருந்தவ, நாங்களும் கொஞ்ச காலமாக அவவுக்கு ஒரு சதமும் கொடுக்கவில்லை அதுவும் எங்கடை பிழை தானே நான்தான் இனி எப்பிடிக் கொடுப்பேன்'' என கூறும் போது அவளின் குரலில் வேதனை வெளிப்பட்டது.

''என்றுலும் நீ என்ன கிணற்றில குதிக்கிறதே என்று அவவின் எண்ணம். கொஞ்சமாவது யோசிக்க வேண்டாமே நல்ல மனிசிதான்'' என மீண்டும் மங்களாம்பிகையை திட்டினுள் தங்கலட்சுமி. நீங்கள் அவவை பேசாதேங்கோ மாமி ஏதோ எனக்கு அளந்த அளவு கிடைக்கும் தானே. ''பெருமூச்சுடன் சொன்ஞள் வசந்தமலர். ''இந்த வீட்டை விட்டிட்டு என்ன செய்ய போகிருய் பிள்ளை'' கந்தையர் கேட்டார்.

''எனக்கு என்ன செய்யிறது என்று தெரியேல்லை அப்பு''

' நீ ஒன்றுக்கும் யோசியாத பிள்ளை உனக்கு ஒரு நல்ல வழி காட்ட வேண்டும் என்று தான் நானும்உன்ரை மாமியும் இஞ்சை வந்தனுங்கள்''

''என்ன அப்பு சொல்றியள்''

●நீ தனிய இருந்து என்ன பிள்ளை செய்யப்போருய். உனக்கு ஆரின்ரை உதவி சகோதரங்களோ அல்லது வேறு யார்தான் உதவி செய்யப்போயினம். நான் ஒருத்தி மாமி என்று இருக்கிறன். நானும் அவவையளைப் போல

மனிசத்தன்மையில்லாமல் இருக்க மனம்வரேல்லை. அதால தான் அப்புவையும் கூட்டிக் கொண்டு வந்தனுன்'' என்றுள் தங்கலட்சுமி.

''என்ன மாமி''

''நீ தனிய இருந்து கஷ்ரப் படாமல் என்னேடை வந்திரு. என்னுடைய மூன்று பிள்ளையளோடை உன்னையும் சேர்த்துநாலுபிள்ளையாகநான் வைத்துப்பார்ப்பன், வசந்த மலர் நீ என்னைநம்பு'' என தங்கலடசுமி சொல்லும்போது அவள் கண்கள் கலங்கின, நாததழுதழுக்க அவள் சொன்ன மாதிரியில் வசந்த மலர் உருகிப்போனுள்.

''ஐயோ மாமி உங்களுக்கு ஏன் வீண் சிரமம் நான் ஏன் உங்களுக்கு பாரமாக இருக்க வேண்டும்'' என வசந்தமலர் கூறும் போது கந்தையர் இடைமறித்தார்.

''பிள்ளை வசந்தமலர் நீ அப்படிச் சொல்லக் கூடாது. தங்கலட்சுமி உனக்கு எட்டத்து சொந்தம் என்றுலும் மாமிமுறையானவள் நீ இப்படி தனிய இருக்க அவவுக்கு எப்பிடி மனம் வரும். நீ கட்டாயம் அவவோடை தான் போயிருக்க வேணும்'' என்றுர். ''மற்றவை மாதிரி என்னையும் நினைக்காதைவசந்த மலர் நீ கட்டாயம் என்னேடை வருவாய் என்று தான் நம்பிக்கை கொண்டு இஞ்சை வந்தனுன் என்ரை நம்பிக்கையை வீணுக்கிப் போடாதே'' என்றுள் தங்கலட்சுமி.

வசந்தமலர் எதுவுமே பேசவில்லை அவள் கடுமையான யோசனையில்ஆழ்ந்துபோனுள். இருக்கிற வீட்டையும் வளவையும் விட்டு எழும்ப வேண்டும்; அப்படி எழும்பினுல் எங்கு போவது? எப்படி வாழ்வது? என்பது பிரச்னை தான்.

மாமி கூப்பிடுகின்ற அவவுடன் போனுல் என்ன? என்று அவள் மனம் கேட்டது, ஆனுலும் அதற்கு இலகுவில் விடை காணமுடியவில்லை.

''மாமி நான் எதற்கும்...'' ''நல முடிவாக சொல்லு'' என்று கூறி விட்டு தங்கலட்சுமி திண்ணையை விட்டு எழும்பினுள். கூடவே கந்தையரும் எழும்பினுர்.

இருவரையும் படலை வரை சென்று வழிஅனுப்பிவைத்தாள் வசந்தமலர்.

★

அந்திப்பொழுது சாய்ந்து நன்றுக இருள் சூழ்ந்து விட்ட போதும் வசந்தமலர் இன்னும் விளக்கேற்றவில்லை. இருண்டு கிடந்த அவள் மனம் போலவே அந்த வீடும் இருண்டு கிடந்தது. சங்கரன் திண்ணையில் தூங்கிக்கொண்டிருந்தான்.

மங்கிய இருளில் யாரோ படலையை திறந்து கொண்டு உள்ளே வருவதை திண்ணையில் இருந்த வசந்தமலர் அவதானித்தாள் வருபவர் சுருட்டு புகைத்துக் கொண்டு வந்தார்.

அதை அடையாளமாக வைத்துக்கொண்டு வருபவர். பொன்னம்பலம் தான் என்பதை வசந்தமலர் ஊகித்துக் கொண்டாள். இந்த நேரத்தில் இவர் ஏன் வருகின்றுர் என நினைத்தவாறு திண்ணையை விட்டு எழுந்தாள் அவள்.

பொன்னம்பலம் சுருட்டை புகைத்துக் கொண்டு தலைவாசல் திண்ணைக்கருகில் வந்தார். ''வாங்கோ...'' என்று மெல்லிய குரலில் வசந்தமலர் கூறினுலும் அந்தக்குரலில் உற்சாகம் இருக்கவில்லை,

பொன்னம்பலம் எதுவம் பேசவில்லை; திண்ணையருகில் நின்றுகொண்டிருந்தார் வந்தவரை நிற்கவைப்பது சரியில்லை என்று நினைத்த வசந்தமலர் சிரத்து சங்கடத்துடன் ''திண்ணையில் இருங்கோவன்'என்று சொன்ஞள். அவள் குரலில் பதற்றம் தென்பட்டது.

பொன்னம்பலம் திண்ணையில் அமர்ந்தார். அவரது விழிகள் அந்த இருளிலும் வசந்த மலரை ஊடுருவின.

''நான் ஒரு அலுவலாக வந்தனுன்...''

அவர் அப்படி சொன்னுலும் அதற்கு எதுவுமே வசந்த மலர் கூறவில்லை.

''என்ரை மனிசியைப்பற்றி உமக்கு தெரியும்தானே. அவளால தான் நான் அன்றைக்கு வர்து செத்தவீட்டு செலவுக்காக கொடியை வேண்டிக் கொண்டு போனனுன். நான் திருப்பி வேண்டவேணும் என்று செத்த வீட்டு செலவுக்கு காசு தரவில்லை...''

''அதுக்கென்ன பரவாயில்லை...''

''எனக்கு அதால பெரிய துன்பமாக இருக்கிறது...''

''உங்கடை மனிசியிலேயும் பிழையில்லை. அவவுக்குத்தான் தெரியும் காசின்ரை அருமை''

''என்றுலும் நீர் நல்லாய் துன்பப்பட்டு போயிருக்கேக்க அது கூடாது தானே. சரி அதை விடுவம் இப்ப நான் வந்த அலுவலுச்கு வருவம். இப்ப வீட்டிலை வேறை ஆட்கள் இல்லைத்தானே...''

''இல்லை'' என்று வசந்த மலர் கூறும்போது மனத்தில் ஒருவிதமான கலவரம் தோன்றியது.

பொன்னம்பலம் தான் இருந்த இடத்தை விட்டு எழுந்து வசந்தமலர் நின்று கொண்டிருந்த இடத்துக்கு சமீபமாக வந்து அமர்ந்தார்.

அவரது செய்கை வசந்த மலருக்கு திகைப்பினை ஊட்டியது. பொன்னம்பலத்தின் போக்கு அவளுக்கு புரியவில்லை. தடுமாற்றமாக இருந்தது. [வளரும்]

## சுவடுகள்

கார்முகில்கள் பொழிகின்ற மழையின் தாரை
வருகின்ற பெருஞ்சாலை அழிந்துபோகும்
கதிரவனின் பொற்கிரணம் சென்ற மார்க்கம்
கண்ணுக்கும் கருத்துக்கும் எட்டவில்லை
வானமிசைப் பறவையெலாம் செல்லும்போது
காலடியின் அடையாளம் பொறிக்குமாமோ
விண்வெளியில் விமானங்கள் பறந்த பாதை
விஞ்ஞானம் அமைத்ததொரு வீதியாமோ?

மனிதகுலம் நடந்தவழி தடயமாகி
நெடுவழியாய் நீள்வதென்ன மாயமந்தோ!
கடலோரம் கட்டுகின்ற சிறுவர் வீட்டை
கடலைகள் அடித்தழித்துச் செல்வதேபோல்
காலமெனக் கைப்பிடித்து அழைத்த பின்னர்
நாமெல்லாம் சென்றவழி நாமேகாணேம்
நிலையென்று நாம் சமைத்த சுவடுயாவும்
நிலையாமை உடையவென நினைவார் யாரே.

— முருகவே பரமநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஆஸ்ரலேஷியக் கிண்ணம்'

## ஒரு கண்ணோட்டம்

அண்மையில் ஷார்ஜாவில் நடைபெற்ற ஆஸ்ரலேஷியாக் கிண்ணத்திற்கான கிரிக்கெட் போட்டியில் பங்கு பற்றிய ஐந்து நாட்டு அணிகளும் மிகவும் விறுவிறுப்பாகவும், சிறப்பாகவும் விளையாடியமை குறிப்பிடத்தக்கது. இப்போட்டியில் ஆசியாவிலிருந்து இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளும், அவுஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளும் பங்கு பற்றின. எனினும் இப்போட்டித் தொடரில் மிகவும் சிறப்பான முறையில் ஆடிப் பல வெற்றிகளையும் சாதனைகளையும் புரிந்த அணிகள் இந்திய, பாகிஸ்தான் அணிகளாகும்.

### 1-ம் போட்டி

இங்கு நடைபெற்ற போட்டியில் ஆசிய, அவுஸ்திரேலிய நாடுகள் பங்குபற்றிய போதிலும் ஆசிய நாடுகளின் கையே ஓங்கி நின்றது அனைவரும் அறிந்ததாகும். மிகவும் பலம் வாய்ந்த அவுஸ்திரேலிய அணி தனது தலைவர் அலன்போடர் இல்லாத நிலையில் முதலாவது போட்டியில் ஆடியது. இக்கட்டான நிலையில் எல்லாம் அவுஸ்திரேலிய அணியைக் கைதூக்கிவிடும் அலன்போடர் இல்லாத நிலையில் அவுஸ்திரேலியர்கள் பாகிஸ்தான் அணியுடன் மோதித் தோல்வியடைந்ததுடன் போட்டியிலிருந்து முற்றாக விலக்கப்பட்டனர். இப்போட்டியில் பாகிஸ்தானின் ஆரம்ப ஆட்டக்காரரான முடாஸர் நஸார் மிகவும் சிறப்பாக ஆடி சிறந்த வீரருக்கான பரிசைப் பெற்றார்.

### 2-ம் போட்டி

இரண்டாவது போட்டியில் இந்திய அணி நியூசிலாந்து அணியைத் தோல்வியடையச் செய்தது. இப்போட்டியில் இந்திய அணியின் வெற்றிக்கு ஊன்றுகோலாக இருந்தவர்கள் இந்திய அணியின் உப தலைவர் ரவி சாஸ்திரியும், இந்திய அணியில் மீண்டும் சேர்த்துக் கொள்ளப்பட்ட சுழல் பந்து வீச்சாளரான கீர்த்தி அசாட்டுமாவார்கள். இவர்கள் நான்கு விக்கட்டுக்கள் இழப்புக்கு 24 ஓட்டங்கள் என்ற இக்கட்டான நிலையில் இருந்த இந்திய அணியை தமது சிறப்பான ஆட்டத்தினால் வெற்றிப் பாதைக்கு இட்டுச் சென்றனர். எனினும் இந்தப்போட்டியின் சிறந்த வீரருக்கான பரிசை இந்திய அணியின் பெறுமதி வாய்ந்த முதல் மூன்று விக்கட்டுக்களான சுனில் கவாஸ்கர், கிருஷ்ணமாச்சாரி ஸ்ரீகாந்த், முகமட் அசாருதீன் ஆகியோரை அதிக ஓட்டங்கள் எடுக்க விடாது வீழ்த்திய நியூசிலாந்துப் பந்து வீச்சாளர் இயன் சற்பீல்ட் பெற்றுக் கொண்டார்.

### அரை இறுதிப் போட்டிகள்

அடுத்து நடைபெற்ற முதலாவது அரை இறுதி ஆட்டத்தில் இந்திய அணி இலங்கை அணியை எதிர்த்து ஆடியது. இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி இளம் ஆட்டக்காரரான அசந்தா குருசிங்கவின் சிறப்பான ஆட்டத்தின் காரணமாக 50 ஓவர்களில் 205 ஓட்டங்களை எடுத்தது இப்போட்டியில் இந்திய அணியின் சார்பில் மனிந்தர் சிங்கும், சேஷட்டன் சர்மாவும் சிறப்பாகப் பந்து வீசினர்கள். பின்பு இந்திய அணி ஆட்டத்தை ஆரம்பித்தது. இந்திய அணியின் ஆரம்ப ஆட்டக்காரர்களான சுனில் கவாஸ்கரும், கிருஷ்ணமாச்சாரி, ஸ்ரீகாந்தும் இலங்கை அணியின் நம்பிக்கையை சிறிது நேரத்திலேயே முறியடித்தனர். ஸ்ரீகாந்த் 59 ஓட்டங்களையும், காவஸ்கர் 71 ஓட்டங்களையும் எடுத்ததுடன் முதலாவது விக்கட் இணைப்புக்கு 93 ஓட்டங்களை எடுத்தனர். எனினும் இந்திய அணி இறுதி நேரத்தில் மிகவும் சிரமப்பட்டது என்றே சொல்ல வேண்டும். ஸ்ரீகாந்த், கவாஸ்கர், அசாருதீன் தவிர்ந்த இந்திய அணியின் பின்னணித் துடுப்பாட்ட வீரர்கள் அனைவரும் பொறுப்பாக ஆடாத நிலையில் இறுதி ஓவர்வரை இந்தியர்களின் வெற்றியை சந்தேகத்துக்கிடமாக்கினர். எனினும் இந்திய அணியின் உபதலைவரான ரவிசாஸ்திரியும், மதன்வாலும் நிலைமையை மாற்றியமைத்தனர். இறுதிநேரத்தில் தனது இயல்பான ஆட்டத்தை மாற்றி மிகவும் பொறுப்புணர்ச்சியுடன் விளையாடிய சாஸ்திரி இரண்டு பவுண்டரிகளை அடித்ததன் மூலம் 49.1 ஓவர்களிலேயே இந்திய அணியை வெற்றியடையச் செய்தார். இப்போட்டியின் சிறந்த வீரருக்கான பரிசை இந்திய அணியின் நம்பிக்கை நட்சத்திரமாகிய சுனில் கவாஸ்கர் பெற்றுக் கொண்டார்.

இதனை அடுத்து நடைபெற்ற இரண்டாவது அரை இறுதி ஆட்டத்தில, நியூசிலாந்து அணி பாகிஸ்தான் அணியின் பந்து வீச்சுக்கு முகங்கொடுக்க இயலாது 64 ஓட்டங்களுக்கு சகல விக்கட்டுக்களையும் இழந்தது.

பின்பு ஆடிய பாகிஸ்தான் அணியின் ஆரம்ப ஆட்டக்காரர்களான முடாஸர் நஸாரும் மொஷின் கானும் விக்கட் இழப்பின்றி 65 ஓட்டங்களை எடுத்து பாகிஸ்தான் அணியை வெற்றியடையச் செய்தனர்.

### இறுதிப் போட்டி

இறுதிப்போட்டியில் பூவா தலையா போட்டதில் ஜெயித்த பாகிஸ்தான்அணி இந்திய அணியை ஆடப்பணித்தது. இந்தியர்கள் ஆடத்தொடங்கியதும் வழமைபோல் ஆரம்ப ஆட்டக்காரர்களான சுனில் கவாஸ்கரும், ஸ்ரீகாந்தும் இணைந்து 117 ஓட்டங்களை 1-வது விக்கட் இணைப்புக்குப் பெற்று ஷார்ஜாவில் முன்னர் பெறப்பட்ட மேற்கிந்தியர்களின் 114 என்ற சாதனையை முறியடித்தனர். அத்துடன் ஸ்ரீகாந்த் தனது சொந்த எண்ணிக்கையாக 75 ஓட்டங்களை 69 பந்து வீச்சுக்களில் மின்னல் வேகத்தில் அடித்துப் பாகிஸ்தான் வீரர்களைத் திணறடித்தார். இவரது 75 ஓட்டங்களில் 8 பவுண்டரிகளும் இரண்டு சிக்ஸர்களும் அடங்கும். இந்த இரண்டு சிக்ஸர்களும் ஒரு ஓவரிலேயே பெறப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அடுத்து இந்திய அணியின் சாதனை வீரரான சுனில் கவாஸ்கர் 92 ஓட்டங்களை எடுத்ததன் மூலமும் டிலிப் வென்சாக்கார் 50 ஓட்டங்களைஎடுத்ததன் மூலமும் இந்திய அணியின் எண்ணிக்கையாக 50 ஓவர்களில் 245ஓட்டங்களை எடுத்து பாகிஸ்தான் அணியை ஆடப்பணித்தனர். ஆரம்பத்தில் இந்திய அணி மிகவும் சிறப்பாகப் பந்து வீசி பாகிஸ்தான் வீரர்களான முடாஸர் நஸார், மொஷின் கான், றமீல் ராஜா ஆகியோரின் விக்கெட்டுக்களை வீழ்த்தினர். எனினும் பாகிஸ்தான் அணியின் உபதலைவரான ஜாவிட் மியன்டாட் நிலைமையை மாற்றியமைத்தார். இந்திய அணிக்கெதிரான சகல போட்டிகளிலும் ஒளிவிடும் பாகிஸ்தானிய நட்சத்திரமான மியன்டாட் இப்போட்டியிலும் தனது திறமையைக் காட்டத்தவறவில்லை. ஆரம்பத்திலிருந்தே ஒற்றை ஒற்றையாக எண்ணிக்கையைச் சேர்த்த மியன்டாட் மிகவும் சிறப்பாக ஆடிப் பாகிஸ்தான் அணியின் இறுதி நேர வெற்றிக்கு வழிவகுத்தார். கடைசிப்பந்தில் வெற்றி யார் பக்கம் என்று ஊசலாடிக் கொண்டிருந்த நிலையில் மியன்டாட் மிகவும் பொறுப்புணர்ச்சியுடன் பந்தை சிக்ஸருக்கு அடித்தன் மூலம் பாகிஸ்தான் அணிக்கு வெற்றியைப் பெற்றுக் கொடுத்தார். இதன் மூலம் இப்போட்டியின் சிறந்த வீரருக்கான பரிசைப் பெற்றது மட்டுமல்லாமல் ஆஸ்ரலேஷியாகக் கோப்பையையும் பாகிஸ்தான் பக்கம் தட்டிக்கொண்டார்.

இப்போட்டியில் இந்திய அணியின் தோல்விக்குக்காரணம் இந்திய அணியின் பின்னணித் துடுப்பெடுத்தாட்ட வீரர்களின் பொறுப்பற்ற ஆட்டம் என்றே சொல்ல வேண்டும். இவர்கள் பாகிஸ்தான் பந்து வீச்சாளர்களான இம்ரான்கான், வோசிம் அக்ரம் ஆகியோரின் பந்து வீச்சுக்களுக்கு தாக்குப்பிடிக்க முடியாத நிலையில் ஒருவர் பின் ஒருவராக விக்கெட்டுக்களை இழந்ததுடன் ஓட்டவேகத்தையும் குறைத்தனர்,

ஆஸ்ரலேஷியாக் கோப்பையைக்கோட்டை விட்டநிலையில் அடுத்து இங்கிலாந்து செல்லும் இந்திய அணி அதன் தலைவர் கபில்தேவ் தலைமையின் முதலாவது டெஸ்ட் வெற்றியைப் பெறுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

வதிரியூர். இ. சிவசங்கர்

---

# சிறுவரிடம் காணப்படும்

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

சிறுமியை இக்குறைபாடு பாதிக்கிறது. ஐந்து வயதில் பத்து வீத சிறுவர்களிடம் இக்குறைபாடு காணப்படுகிறது. பத்து வயதானதும் ஐந்து வீதமாகக் குறைந்து பதினைந்து வயதுக்குமேல் ஒன்று தொடக்கம் இரண்டு வீதத்தினரிடமே இக்குறைபாடு காணப்படுகிறது. இதற்குப் பல காரணங்கள் உள. இக்குறைபாடுள்ள பிள்ளைகளுக்கு இரவில் காக்கை வலிப்பு ஏற்படுகிறதா என்று பெற்ருேர் அவதானிக்க வேண்டும் பானங்கள் பாவிக்கும் அளவை மாலை நேரத்தில் குறைப்பதாலும் பிள்ளை நித்திரைக்குப் போகு முன் சிறுநீர் கழிக்குமாறு பிள்ளையைப் பலவந்தப் படுத்துவதாலும் இக்குறைபாடு நீங்குமெனப் பல பெற்ருேர்கள் நம்புகின்றனர். ஆனுல் இவற்றினுல் எதுவித பயனுமில்லை. நந்திக்குப் படைத்த பிரசாதத்தை உண்பதால் இக்குறைபாடு நீங்குமென சிலர் நம்புகின்றனர். இதுஒருமூடநம்பிக்கை. இதில் எதுவிதமான உண்மையும் இல்லை. இதற்கு மனுேவைத்திய நிபுணரிடம் காட்டித் தகுந்த ஆலோசனையும் சிகிச்சையும் பெற வேண்டும்.

### கவனக் குறைவும் வேகமாகச் செயற்படுதலும்

ஆரம்ப பாடசாலை வயதில் 10 தொடக்கம் 15 வீதம் சிறுவர்களிடம் இக்குறைபாடு காணப்படுகிறது. இவர்கள் எந்த ஒரு விஷயத்திலும் சில விநாடிகளுக்கு மேல் கவனம் செலுத்துவதில்லை. அடிக்கடி ஒரு விஷயத்திலிருந்து இவர்கள் அவதானம் இன்னெரு விஷயத்திற்கு மாறிக் கொண்டே இருக்கும் இவர்கள் மிகவும் வேகமாகச் செயற்படுவார்கள். முதன் முதலில் நடக்கத் தொடங்கும் போதே இவர்களுடைய அதிவேகத் தன்மையை அவதானிக்கலாம். இவர்கள் கைக்கு அகப்படும் பொருள்கள் எதுவும் தப்புவதில்லை. வைத்திய சாலைக்கு வந்தால் வைத்தியரின் பரிசோதனைக் கருவிகளுக்கும் ஆபத்து ஏற்படுகிறது. இச்சிறுவர்கள் கர்ப்பப்பையில் இருக்கும் போதே சிசுவின் அங்க அசைவுகள் கூடுதலாக இருக்கக் கூடும். இவர்களின் மூளை ஓரளவுக்குப் பாதிக்கப் படுவதே இதற்குக் காரணம் என்று பல வைத்தியர்களும் நம்புகிருர்கள். (Minimal crebral Dysfunction) இக்குறைபாட்டில் இரண்டு வகை உண்டு. முதலாவது வகையினர் இவர்கள் எந்தச் சூழ்நிலையிலும் வேகமாகச்செயற்படுவார்கள். அடுத்தவகையினர் சிலசில சூழ்நிலைகளிலேயே வேகமாகச் செயற்படுவார்கள் பிந்திய வகையைச் சேர்ந்தவர்களுக்குப் பாதிப்புக்குறைவு கவனக்குறைவினுல் இவர்கள் பாடசாலைகளில் பின்தங்கிய மாணவர்களாகக் காணப்படுகிருர்கள். இவர்களின் வேகம் நித்திரையில் அடங்கி விடும். இக்குறைபாடு ஆண்பிள்ளைகளிடம் அதிகமாகக் காணப்படுகிறது. 10 அல்லது 11 வயது கிட்டியதும் இவர்களின் வேகம் குறைந்து விடுகிறது ஆனுல் துர்க்குணங்கள் ஏற்படுகின்றன பள்ளிக்கூடம் போகாது திரிதல், களவு புரிதல் முதலிய தீய நடத்தைகளில் இவர்களில் அநேகர் வயது வந்ததும் ஈடுபடுகிருர்கள். வைத்திய சிகிச்சை மூலம் இவர்களில் அநேகரைக் கட்டுப் படுத்தலாம்.

### அச்தாரண அங்க அசைவுகள்

இவை திரும்பத்திரும்ப வரும் திடீர் அங்க அசைவுகளாகும், இவ்வசைவுகளைச் சுய கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர இயலாது. அத்துடன் இவற்றினுல் எதுவித பலனும் கிடையாது. இவற்றைச் சிறுபிள்ளைவாத நோயினுல் வரும் Chorea என்னும் குறைபாட்டிலிருந்து வித்தியாசம் கண்டு சொள்ள வேண்டும். Chorea என்னும் குறைபாட்டில் ஓர் அசைவு திரும்பவும் வருவதில்லை. இக்குறைபாடு ஏழு வயதில் ஏழுவீதம் சிறுவரைப் பாதிக்கின்றது இது முக்கியமாக முகத்தையும் கைகளையும் பாதிக்கின்றது. அடிக்கடி கண்வெட்டுதல் இதில் சர்வசாதாரணமானது. மேலும், தோள்களை அசைத்தல், கழுத்தைத் திருப்புதல் போன்ற அங்க அசைவுகளும் ஏற்படும். இக்குறை பற்றிய சிறுவர்களில் அநேகர் வயது வந்ததும் Anxiety Neurosis என்னும் நரம்புத் தளர்ச்சியினுல் பீடிக்கப் படுகிருர்கள். Gilles de la Tourette Syndrome எனப்படுவது இதில் ஒரு விசேஷ வகை இதில் அசாதாரண அங்க அசைவுளுடன் மற்றவர்கள் சொல்லும் சொற்களை அல்லது வசனங்களைத் திருப்பிச் சொல்லுதல் கட்டுப் படுத்த முடியாமல் தகாத வார்த்தைகளை உதிர்த்தல் முதலிய அறிகுறிகளும் உண்டு. இதற்கு வைத்திய சிகிச்சை மூலம் அநேகமாக நல்ல பலன் கிடைக்கும்.

### திக்குவாய்

ஐந்துவயது வரையும் சிறுபிள்ளைகள் பேசும்போது முதன் முதல் சொற்களை அல்லது வசனங்களைத் திக்கித்திக்கி அல்லது திருப்பித் திருப்பிச் சொல்வார்கள் இது சாதாரண வளர்ச்சியில் ஒருபகுதியே ஐந்து வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு திக்குவாய் ஏற்படக்கூடும்.

இதனுல் பாதிக்கப்பட்டவர்களிடம் திரும்பத் திரும்ப ஒரு சொல்லைச் சொல்லுவதனுலோ தயக்கத்தினுலோ சொற்கள் தடைப்படுவதினுலோ, திரும்பத் திரும்பப் பேச்சுத் தடைப்படும். இக் குறைபாட்டுக்கு வைத்திய நிபுணர்களின் பங்கு மிகவும் குறைவானதே. பேச்சுப் பயிற்சி வல்லுநர்களின் உதவி மூலம் நல்ல பலன் கிடைக்கலாம். மிகவும் சிறந்த முறை ஒவ்வொரு சொல்லின் பகுதியையும் மெதுவாகவும், ஆனுல் திடநம்பிக்கையுடனும் உரத்தும் பேசப் பழகுதல். இதனுல் நல்ல பலன் கிடைக்கலாம்.

---

# பண்டிதமணி

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

கிருக்கின்றன இவைகளை விடுவித்துப் பொருள் காண்பது எமக்கெல்லாம் ஒரே இடர்ப்பாடாகவுள்ளது. ஆனுல் எமது ஆசான் பண்டிதமணி அவர்கள் இவைகளையெல்லாம் விரித்து பெருவிளக்கத்தைத்தந்து எமக்குப் பகலாக்கி விடுவார். இனி நாம் ஆரை அணுகுவோம்? எங்களை மயக்கும் ஐயங்களைப் போக்கும் ஒளிதிகழ் குருவாகவே எமக்கு அவர் அமர்ந்திருந்தார். சித்தாந்தம் விளக்கும் குருவின் பண்புகளை அவர்பெற்றிருந்தார் என்று சொல்வது மிகையாகாது.

ஈகை, விருந்தோம்பல் அவரின் பண்பு. உண்டி உடுதுணி ஏழைகளுக்கு வழங்குவார்.

"இரப்பாரை இல்லாயின்
ஈர்ங்கண்மா ஞாலம்
மரப்பாவை சென்றுவந்
தற்று"

என்ற திருக்குறளை ஆசான் எமக்காகச் சொல்லியருளுவார்.

மாற்ருரிலும் நல்லதைக் காணும் சால்புடையோர் பண்டிதமணியவர்கள். கல்விக்காக. உயர்ந்த வாழ்க்கைக் கலைக்காக, ஒரு மாணவ பரம்பரையை உண்டுபண்ணுவதற்காக தமது வாழ்நாளை அர்ப்பணித்து, திகழ்ந்த தூய பிரம்மச்சரிய வாழ்வை வாழ்ந்து சிவபதம் எய்தியுள்ளார். அன்னுரின் வாழ்க்கை மனிதகுலத்துக்கு ஒரு முன்மாதிரியாக விளங்குகிறது.

---

# உங்கள்எலுமிச்சை

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

மரிக்கப்பட்ட ஒரு முதிர்ந்த மாத்தில் இருந்து வருடம் 1000 பழங்களை பெறமுடியும் இதன் மூலம் ஒருமரத்தில் இருந்து ஆகக்குறைந்தது 600 ரூபா பெறமுடியும். இதைத்தவிர எமக்கு வேண்டிய பழச்சாறு, ஊறுகாய் முதலானவற்றை பெற்றுக் கொள்வதுடன் பிறமாவட்டங்களுக்கும் விற்பனை செய்யலாம். ஆகையால் எமது மாவட்டத்தில் ஒவ்வொரு வீட்டிலும் குறைந்தது இரண்டு எலுமிச்சம் கன்றுகளையாவது நட்டு நல்ல முறையில் பராமரிக்க நாம் ஒவ்வொருவரும் முயற்சிக்க வேண்டும்.

---

# கருணாநிதி

கருணாநிதிக்கும் வெற்றிகளுக்கும் எப்பொழுதும் நெருங்கிய சம்பந்தம் உண்டு. குறிவைத்து அடிப்பதில் தமிழக அரசியலிலே தனிப் புகழ் பெறப்போகிறவர்கருணாநிதி.

—கல்கண்டு ஆசிரியர் தமிழ்வாணன் 25-6 64 கல்கண்டு சஞ்சிகையில் வெளியிட்ட கருத்து.

— கணேஷ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாநகராட்சி மன்றம் 130,000 மக்களுக்கு சேவை செய்கிறது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகராட்சி மன்றம் அதன் எல்லைக்குள் வசிக்கும் சுமார் ஒருலட்சத்து முப்பதாயிரம் தமிழ்பேசும் மக்களுக்கு சுகாதாரம், மின்சாரம், குடிநீர், வீதி வசதிகளைச் செய்து வருகின்றது. மக்களிட மிருந்து பெறப்படும். சோலைவரி, மின்சாரவரி, களியாட்டுவரி, வாகனவரி மற்றும் வரிகளிலிருந்தே மக்கள் சேவைக்கான நிதியை ஒதுக்கிவருகின்றன.

''இந்த நகரம் எங்களுடையது. எங்கள் வீட்டை எப்படிப் பேணிப்பாதுகாக்கின்றோமோ அதைப் போன்று தான் நகரத்தையும் பாதுகாக்கவேண்டும். இந்த எண்ணம் இந்நகர எல்லைக்குள் வாழும் ஒவ்வொருவருக்கும் ஏற்படுமானுல் சிறந்த சேவைகளைப் பறமுடியும்.''



ஆணையாளர் சிவஞானம் காரியாலய அலுவல்களில் மூழ்கியிருக்கிறார்.

யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் 'ஈழநாடு'க்கு அளித்த பிரத்தியேக பேட்டியின் போது இவ்வாறு கூறினர்.

## படிப்படியாக உயர்ந்தவர்

ஆணையாளர் திரு சிவஞானம் யாழ் நகரை தாயகமாக கொண்டவர். மாநகரசபையில் கணக்காளராக சேர்ந்து ஆணையாளராக படிப்படியாக முன்னேறியவர். காரியாலயச் சிற்றூழியர் முதல் கணக்காளர்வரை ஒவ்வொருவரையும் நன்கு அறிந்தவர் அவர்கள் அன்பையும் ஆதரவையும் பெற்றவர் அதனுல் இந்தச் சிக்கலான நேரத்திலும் சிரமமானகாரியத்தை சுலபமாக செய்து முடித்துவிடுவார்

தீயணைக்கும் படை அவரின் சேவைக்கு ஒரு நினைவு சின்னம். நகரின் ரியூப்லைட்டுக்கள் அவரின் ஞாபகச்சின்னம் நல்லூரில் அவர் நகரமன்றத்திற்காக பெற்றுக் கொடுத்திருக்கும் காணி, மக்கள் மனதில் என்றென்றும் நீங்காமல் நிலைத்து நிற்கும்.

அமைதியாக உறுதியாக நகர மக்களுக்கு அவர் ஆற்றிவரும் சேவையை பலர் போற்றி புகழ்ந்திருப்பதை பார்த்திருக்கிறேன்

மக்கள் ஆதரவைப் பற்றி கேட்டபோது பெரும்பாலான மக்கள் தாமாகவே வரிகளைத் தவருமல் செலுத்தி ஒத்துழைப்பு வழங்குவதாக ஆணையாளர் தெரிவித்தார்.

அதேசமயம் சட்டவிரோத மின்பாவனை சட்டவிரோத குடிநீர் பாவனை, சட்டவிரோத இறைச்சிக்கடைகள் பற்றி கவலைதெரிவித்தார் அவர்.

## சட்டவிரோத மின்சாரம்

மின்சார சபையிலிருந்து மின்சாரம் பெறுபவர்களில் 35 விதமானேர் சட்டவிரோதமாக பெறுகிறுர்கள் என்றும் இந்த 35 வீதத்திற்குரிய பணத்தை மாநகமன்றமே மின்சாரசபைக்கு செலுத்த வேண்டியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மின்சார சபைக்கு மாநகர மன்றம் கட்டவேண்டியபணம் நிலுவையாக உள்ளது. இதனுல் நகரின் மின்சாரத்தை துண்டிக்க முடிவுசெய்யப்பட்டது. இங்கு வந்த சபைக்

## யாழ் மாநகர ஆணையாளர் திரு. சிவஞானத்துடன் ஒரு பேட்டி

கணக்காளருடன் பேசி நிலுவைப் பணத்தில் 50 வீதம் மாதம் மாதம் கட்டுவதற்கு ஆணையாளர் ஏற்பாடுசெய்தார். இதனுல் இன்று நகரம் இருளில் மூழ்காமல் இருக்கிறது.

## வாகனங்கள் இல்லாமல்

மிகவும் குறைந்த வசதியுடன் நகரின் சுகாதார சேவை பூர்த்திசெய்யப்பட்டு வருகிறது. குப்பைகளை அகற்றுவதற்கு போதிய வாகனங்கள் இல்லாதது பெருங்குறையாகவுள்ளது வளவுகளில் குப்பைகளை வெட்டிப் புதைக்குமாறு ஆணையாளர் பல தடவை வேண்டுகோள் விட்டாராயினும் இன்றும்பழைய நிலைமைதான்.

அது பசளையாகவும்போகும், சபைக்கு ஒரு பாரமும் குறையும் என்று ஆணையாளர் தமது வேண்டுகோள்பற்றி விளக்கினர்

## நகரெங்கும் ரியூப் லைட்

நகரெங்குமுள்ள வீதிகள் தோறும லைட் மாற்றப்பட்டு வருகிறது. போதிய வெளிச்சம் கிடைப்பதுடன் நீடித்தகால பாவிப்பு உண்டு என்பதை ஆணையாளர் தெரிவித்தார்.

## வீட்டைப்போல் நகரையும் பாதுகாக்க வேண்டும்

## சன நெருக்கடியைக் குறைக்க...

''பெரிய கடைப் பகுதியில் சன நெருக்கடியைக் குறைக்க ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறீர்களா?'' என நான் கேட்டேன்.

''முனீஸ்வரன்வீதியில்முன்பு தீவுப்பகுதி மினி பஸ்கள் நிறுத்தப்படுவது வழக்கம் மேலதிக பஸ்கள் முனீஸ்வரன் கோவில் பகுதியில் நிறுத்துவது வழக்கமாகவிருந்தது. தற்போதுள்ள நிலையில் இது சாத்தியமில்லை'' என அவர் கூறினர். நான் குறுக்கிட்டு ''அப்படியானுல் வேறுவழி என்ன?'' எனக் கேட்டேன் அதற்கு அவர் ஆஸ்பத்திரிவீதியிலுள்ள சில டாக்ஸி நிலையங்களிலிருந்து டாக்ஸிகள் வேறு இடங்களுக்கு மாற்றப்பட வுள்ளன. அவ்விடங்களில் தீவுப்

பகுதி மினி பஸ்கள் நிறுத்சப்படும். சச்சேரி செல்லும் மினி பஸ்கள், ஆஸ்பத்திரிக்கு முன்னுல் நிறுத்தப்படும். இதேபோல் மேலதிக மினிபஸ்கள் விக்டோறியாவீதியிலும் ஆரிய குளத்திற்கு சமீபத்தில் ஸ்ரான்லி வீதியிலும் நிறுத்தப்படும். அந்தந்த பஸ்ஸிற்குரிய நேரம் வந்ததும் பெரிய கடைக்குச் சென்று பயணிகளை ஏற்றிச் செல்லவேண்டும் பயணிகள் இங்கும் வந்து ஏறிக்கொள்ளலாம். இதனுல் பெரிய கடையில் நெருக்கடி குறையும்'' எனத் தமது திட்டங்களை கூறினர்.

'ஒற்றைவழிப்பாதைகளால் சனநெருக்கடியைக் குறைக்க ஏதாவது வழியுண்டா?'' என நான் கேட்டேன்.

''ஒற்றை வழிப்பதைகளில் குறிப்பிட்ட சில நேரங்களில் மட்டும் வாகனங்கள் நிறுத்தப்படவேண்டும். கஸ்தூரியார் வீதியில் காலை 10 மணிமுதல் 12 மணிவரையும், மாலை 5 மணிமுதல் 6 மணிவரையுமே வாகனங்கள் நிறுத்த அனுமதிக்கப்படும். இதேபோல் கே. கே. எஸ். வீதியில் மிட்டாஸ் கடை சந்திமுதல் சத்திரத்துச் சந்திவரை குறிப்பிட்ட நேரங்களில் மட்டுமே வாகனங்களை நிறுத்தமுடியும்'' என அவர் கூறினர்.

## நடைபாதை வியாபாரிகளுக்கு காலக்கெடு

அடுத்து எனது கேள்வியைக் கேட்கிறேன் ''நடைபாதை வியாபாரிகளால் போக்குவாத்துக்குக் கஷ்டமில்லையா?'' என்று கேட்ட போது,

''நகனல் மக்கள்படும் கஷ்டங்களை அறிவேன் நேரிலும் பார்த்திருக்கிறேன் இம்மாதம் 15ம் திகதிக்குமுன்னர் நடைபாதை வியாபாரிகள் வேறு வசதியான இடங்களுக்குச் சென்றுவிடவேண்டும். இவர்கள் சமீபத்தில் வந்தவர்கள். இவர்களுக்கு இடம் ஒதுக்கிக் கொடுப்பது மாநகரசபையின் பொறுப்பல்ல, மக்கள் நன்மை கருதி இவர்கள் வேறு இடங்களுக்கு சென்றுவிடவேண்டும்.

''நடைபாதைகளில் சிறு தடைகள் இருப்பதால் மக்கள் நடைபாதையைப் பாவிக்காமல் நடுவீதிகளால் நடந்து செல்கிறுர்கள். இதனுல் வாகனதடை தாமதம் ஏற்படுகிறது. விபத்துக்களும் நடக்கிறது'' என அவர் தமது பதிலைச் கூறினர்.

''கோவில்கள் உள்ள பகுதிகளில் இறைச்சிக்கடைகள் திறப்பதற்கு அனுமதிவழங்கப்பட்டதா?''

## சட்ட விரோத இறைச்சிக் கடைகள்

பெருமாள் கோவில், சிவன் கோவில், நல்லூர் கந்தசாமி கோவில், பகுதியில்இறைச்சி விற்பனைக்கு சபை அங்கீகாரம் வழங்கவில்லை. இப்பகுதிகளிலெல்லாம் சட்டவிரோதமாகவே இறைச்சி விற்பனை நடக்கிறது. இந்த இறைச்சி சுகாதாரக்கேடான இடத்தில் வெட்டப்படுகின்றது. அந்த இடத்தை ஒருதடவை பார்த்தால் எவரும்ம இறைச்சி சாப்பிடமாட்டார்கள் என அவர் இதுபற்றிக் கூறினர். அத்துடன் [illegible] றைச்சியும் நாவாந்துறை சின்னக்கடையில் மாட்டிறைச்சியும், பாஷையூரில் ஆடு மாடு இறைச்சியும் விற்க அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினர்

## யூனிசேவ் திட்டம்பற்றி

யூனிசேவ் திட்டவேலைகள் பற்றி கேட்டபோது அவர் பொம்மைவெளியில் இத்திட்டத்தின்கீழ் வேலைகள் பூர்த்தியாகிவிட்டதெனக் கூறினர்

'இத்திட்டத்திற்கு எவ்வளவு செலவாகியுள்ளது?' என்ற கேள்விக்கு இதுவரை 16 லட்சம் ரூபா செலவாகியுள்ளதாகவும் ஜமுனரி அரியாலை மேற்கு, கிழக்கு வேலைகளும் நடைபெறுகின்றதாகவு கூறியதுடன் குழாய் தூக்கும் வேலைகள் இம்மாதமுடிவில் பூர்த்தியாகிவிடுமென்றும் கொழும்புத்துறை, நாயன்மார்கட்டு மூத்தவிநாயகர் கோவிலடியிலும் இவ் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் கூறினர் குடிநீர்பெற வேறுஏதாவது ஏற்பாடு உண்டா?'' என நான் கேட்டேன். அதற்கு அவர் நிலாவரையில் புதிதாக ஆஸ்பத்திரிக்கும் மற்றும் பகுதிகளுக்கும் குடிநீர்வழங்கவிருப்பதாக சொன்னர்.

## ரூ. 50 லட்சம் செலவில் குடிநீர்

நிலாவரையிலிருந்து நகருக்கு சுமார் ஒன்றரை லட்சம் கலன் நீர் கிடைக்கும் இதற்கு 50லட்சம் ரூபா செலவாகும் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் 30 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது மிகுதி 20 லட்சம் ரூபாவை மாநகரசபை வழங்கியுள்ளது இத்திட்டம் பூர்த்தியானுல் நகரின்குடிநீர்ப்பிரச்சினை ஓரளவு திரும் என அவர் மேலும் தகவல் தந்தார்.

யூனிசேவ் திட்டத்தின் கீழ் வேறு ஏதாவது வேலைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளதா'' என்று கேட்டேன் நகரில் இன்னும் 600 வீடுகளில் உள்ள வாழி மலகூடங்கள் மாற்றப்படவேண்டும். யுனிசேவ் திட்டத்தினுல் இவற்றை நீரடைப்புமலகூடங்களாகமாற்ற 750 ரூப முதல் 1000 ரூபா வரையிலான பொருள்கள் வழங்கப்படும். இந்த சலுகை சென்ற மாதம் யூன் மாதம் 5ம் திக வரைதான் என்று கூறினர்,

'மலகூட பொதுக்குழிகள் வேலை முடிந்துவிட்டதா?'' என்று கேட்கப்பட்டபோது யுனிசேவ் திட்டத்தின் கீழ் எட்டு மலகூட பொதுக்குழிகள் அமைக்கப்பட்டுள்ளன.

## கா. யோகநாதன்

இவைகள் தவிர 4 பொது மலகூடங்களும், 4 பொதுக் கிணறுகளு அமைக்கப்பட்டுள்ளன ஒவ்வொரு கிணற்றுக்கும் 8500 ரூபா செலவாகியுள்ளது. யுனிசேவ் திட்டத்தின் கீழ் வலை திருத்தும் தொழிற்சாலையும், தையல் நிலையங்களும் அமைக்கப்படும் மற்றும் யுனிசேவ் திட்டத்தின் கீழ் மலகூட தொட்டிகளில் உள்ள ழிவுகளை அகற்ற யந்திரமொன்று வாங்கப்படும் இதற்கு செலவு அதிகமாகும். ஆனல் அவசியம் தேவை !! எனக்கூறினர்.

## வருமானம் பாதிப்பு

''தற்போது சபையின் வருமானம் எப்படியிருக்கியது? என்று கேட்டபோது அவர்

[11-ம் பக்கம் பார்க்க]

## 'அளவான அவசியமான அடி'

குழந்தைகள் தடைப்பட்டு விழுந்தால், விழுந்த இடத்தை உதைப்பது உண்டு. நாற்காலி முதலான பொருள்களின் மேல் தாக்கி அடிபட்டால், திரும்பி அவற்றை அடிப்பதும் உண்டு.

வளர்ந்த பெரியோர்களிலும் நாடாளும் தலைவர்களிலும் சிலர் சிலவேளைகளில் இவ்வாறு நடந்துகொள்கிறுர்கள்.

எதிர்ப்பவர்களின் மேல் சினம்கொள்வது, தீமை செய்தவர்களைப் பழிக்குப்பழி வாங்குவது, ஒத்துழைக்காதவர்களை ஒதுக்கித்தள்ளுவது முதலான செயல்கள் தனியார் வாழ்விலும் பொதுவாழ்விலும் அறியாமையே என்று கொள்ளவேண்டும்.

டோக்கியோ உச்சிமகாநாட்டில் கலந்துகொள்ள பயணம் செய்யும் அமெரிக்க ஜனதிபதி றீகன் அங்கு பயங்கரவாதம் தொடர்பான பேச்சுவார்த்தைகளை நடத்த உத்தேசித்திருக்கிறுர்.

லிபியா மீது அமெரிக்கா மேற்கொண்ட விமானத் தாக்குதல் அளவானதும் அவசியமானதும் என வர்ணித்திருக்கிறுர்.

இலங்கைக்கும் இந்தக்கண்டுபிடிப்பு 'அட்வான்சில்' கிடைத்திருக்கிறதோ? இங்கு அளவான அவசியமான விமானத்தாக்குதல் வடக்கிலும் கிழக்கிலும் நடைபெறுகிறது.

றீகனின் புதிய ஏற்பாடு பைபிளின் பழைய ஏற்பாட்டில் கைவிடப்பட்ட செல்லாக்காசுபோல் தெரிகிறது. ''கண்ணைப்பிடுங்கினவனின் கண்ணைப்பிடுங்கு; பல்லைப் பிடுங்கினவனின் பல்லைப்பிடுங்கு'' போன்ற அளவான அவசியமான தாக்குதல்கள் மீண்டும் புழக்கத்தில் வருமானுல் உலக அழிவுக்கு அணுகுண்டு அவசியமாகாது.

'உலகில் காணப்படுவது பயங்கரவாதம்' என்பது ஜனதிபதி றீகனின் உறுதியான கருத்து. இலங்கையில் காணப்படுவது பயங்கரவாதம் (வடக்கு, கிழக்கும்) என்பது ஜனதிபதி ஜெயவர்த்தனவின் கருத்து.

இவ்வாறு சிந்திப்பவர்கள் சேர்ந்துவிட்டால் இன்று எமக்குத்தேவைப்படும் ஒரு புதுசூழ்நிலை புஸ்வாணமாய் விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்கள் உற்பத்திப் பொருள்களை இருபத்திநான்கு மணிநேரத்தில் விநியோகிக்க வேண்டுமா?

எமது நிறுவனத்தின் விநியோகப் பிரிவில் கடமையாற்றும் சுமார் 60 பெண்கள் தினசரி ஒவ்வொரு வாடிக்கையாளர்கள் இல்லம் சென்று உற்பத்திப் பொருள்களை விநியோகம்செய்துவருகின்றார்கள். இன்று பல நிறுவனங்கள் தங்கள் உற்பத்திப் பொருள்களை எங்கள் விற்பனைப் பிரிவின் மூலம் விநியோகம் செய்து நன்மை அடைந்துள்ளார்கள். நீங்களும் உங்கள் பொருள்களை விநியோகம் செய்ய உடன் தொடர்பு கொள்ளவும்.

**றொப்பலர் இன்ரநஷனல்,**
இல. 95, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
[A-451]



## வெளிநாடு பிரயாணம்

**கனடா, அமெரிக்கா**
செல்வதற்கு ஏற்கனவே என்னிடம்
பாஸ்போட்டும், பணமும் கொடுத்தவர்கள்
உடனடியாக (சனி, ஞாயிறு)
என்னைச் சந்திக்கவும்.

**வ. நல்லையா,** அளவெட்டி.
(C 2101)



## TOEFL

TEST OF ENGLISH AS A FOREIGN LANGUAGE

America, Canada, Norway போன்ற நாடுகளின் Colleges and Universitiesகளில் Higher Studiesஐத் தொடர விரும்புவோருக்கும் அந்நா களில் Employment Opportunitiesகளை எதிர்பார்ப்பவர்களுக்கும் இப்பரீட்சையில் திறமைச்சித்தி அவசியம்.

WEEKEND CLASSES ARE COMMENCING ON 10—5—86.

ஆசிரியர்- பிரபல ஆங்கில விரிவுரையாளர்:
திரு. கந்தையா நவரேந்திரன்.

வகுப்புகள் பாதுகாப்பான இடத்தில்.
முழுப்பயிற்சிக்கும் கட்டணம் ரூ. 250/-மட்டுமே.

**CANTABIA INSTITUTE**
21, Main Street, Jaffna.
Phone 24201
(A 468)


## உலகநாடுகள்

[3ம் பக்கத் தொடர்ச்சி]

இவ்வாறு பிரபல சட்டத்தரணி திரு. எஸ். நடேசன் கியூ. ஸி. கல்முனை பிரஜைகள் குழு முன்னாள் தலைவரான திரு. போல்றி நல்லநாயகம் மீதான அரச துரோக வழக்கில் அவர் சார்பில் ஆஜராகி வாதிட்டபோதுதெரிவித்தார்.

இவ்வழக்கில் திரு நல்லநாயகம் மீது அரசுக்கெதிரான பிரசாரவேலைகளில் ஈடுபட்டிருந்ததாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி திரு. கே. விக்னராஜா முன்னிலையில் இவ்வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். நடேசன் தமது கருத்துரையில் மேலும் கூறியதாவது: "நாமனைவரும் ஒரு மனித குலத்தவர்கள். ஒவ்வொரு மனித அடிப்படை உரிமை மீறலும் மனித குலத்தின் நலனுக்கும், மகத்துவத்துக்கும் ஊறுவிளைவிப்பதாக உள்ளது. இதனால் மனித உரிமைகளைப் பாதுகாப்பது உலகளாவிய ஒரு பொறுப்பாகவுள்ளது."

மனித அடிப்படை உரிமை மீறல் ஒரு உள்நாட்டுப் பிரச்னை மட்டுமல்லாது சர்வதேச மக்கள், ஸ்தாபனங்களின் கவனத்தைப் பெற்றதாகவும் இருக்கின்றது.

எனவே மனித அடிப்படை உரிமை மீறல் தொடர்பாக சர்வதேச சமூகத்தைத் தட்டி எழுப்பி பாரபட்சமற்ற நீதி விசாரணையைக் கோரும் உரிமை சகல பிரஜைகளுக்கும் உண்டு.

மனித உரிமை மீறல்களை வெளிக்கொணருவதை அரச அதிகாரிகள் தடைசெய்யும் எந்த ஒரு சட்டமும் இலங்கையில் காணப்படவில்லை. உலகத்துக்கோ அல்லது பத்திரிகைகளுக்கோ மனித உரிமை மீறல்கள் குறித்து ஒரு பிரஜை அல்லது ஒரு மனித உரிமைகள் ஸ்தாபனம் புகாரிடுவதைத் தடுக்கும் எந்த ஒரு சட்ட மூலமும் இலங்கையில் இல்லை.

இந்த நிலையில் திரு. நல்லநாயகம் மீதான குற்றச்சாட்டை நிரூபிப்பதற்கு போதியளவு சரட்சியங்கள் காணப்படவில்லை" என்றார்.

திரு. நடேசன் மேல்நீதிமன்றத்தைப் பயன்படுத்தி அரசியல் தர்க்கம் புரிவதாக அரச தரப்பில் ஆஜரான பிரதி சட்டமா அதிபர் திரு. சுனில் டி சில்வா குறிப்பிட்டார்.

ஆனால் திரு. நடேசன், தாம் தமது கட்சிக்காரருக்காக பட்டுமே வாதிடுவதாகவும், தாம் தெரிவிக்கும் கருத்துக்கள் தமது கட்சிக்காரர் சார்பான சட்டநோக்கம் கொண்டவை எனவும் கூறினார்.

(கி)

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் நில அளவை வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

பின்வரும் நில அளவை வேலைகளுக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாண மாநகராட்சிமன்ற ஆணையாளரால் 1986ஆம் ஆண்டு மே மாதம் 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12·00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

### அட்டவணை

| | வேலை விபரம் | கேள்விப் பிணைப்பணம் மீளளிக்கப் படக்கூடியது ரூபா | கேள்விப் படிவக் கட்டணம் மீளளிக்கப் படத்தகாதது ரூபா |
|---|---|---|---|
| 1. | யாழ்ப்பாண மாநகாசபை எல்லைக்குள் இருக்கும் குளங்களின் விஸ்தீரணம் முதலியவிபரங்களையும் அக்குளங்களில் இருந்து இணைக்கப்பட்ட வடிகால்களின் நீரோடும் மட்டங்கள் முதலியவற்றை அளவை (Survey) செய்தல். | 1000/- | 200/- |
| | குறிப்பு:- 10 அடி ஆழ துளைபோட்டு வரும் மண்ணை தட்டுத் தட்டாக பிரிக்கும் துளை இயந்திரம் (Boring Appratus) உள்ளவர்களே விண்ணப்பிக்கலாம். | | |
| 2. | நிலாவரை "இடி" கிணற்றிலிருந்து கோண்டாவில் மாநகரசபை நீர் விநியோக ஸ்தானம் வரை குழாய் நீர் விநியோகம் செய்வதற்கு வேண்டிய அளவு செய்தல். | 1000/- | 200/- |
| | குறிப்பு:- நீர் விநியோகம் வடிகால் அமைப்பு முதலியவேலைகளில் அளவை அனுபவம் உள்ளதை உறுதிப்படுத்தக் கூடியவர்களே விண்ணப்பிக்கலாம். | | |

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து 1986ம் ஆண்டுமே மாதம் 15-ந் திகதிவியாழக்கிழமை நண்பகல் 12 00 மணி வரை மேலேயுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு ஒவ்வொரு கேள்விக்கும் எதிராகவுள்ள கேள்விப் பிணைப்பணம், கேள்விப் படிவக் கட்டணம் ஆகியவற்றைச் செலுத்துவதன் பேரில் பெற்றுக்கொள்ளக் கூடிய படிவங்களின் இணைப்பிரதிகளில் கேள்விகள் சமர்ப்பிக்கப்பட ல் வேண்டும். கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கேள்விகளைச் சமர்ப்பிக்கத்தவறும், கேள்விக்காரர்கள் கேள்விகள் மூடப்படும் தினத்திற்கு முன்னர் தாம் பெற்ற கேள்வி ஆவணங்களைத் திருப்பிச் சமர்ப்பிக்கும் பட்சத்தில் அவர்களால் செலுத்தப்பட்ட கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்படும்.

மேலதிக விபரங்களை மாநகராட்சிமன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து, அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**சி. வீ. கே. சிவஞானம்,**
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சிமன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
28-04-1986.
[A-636]


## BRITE SOAP WASHES BRIGHT




Net Weight: 130 Grams Price: Rs. 2·25
கைதேர்ந்த தொழிலாளர்களால்
விஞ்ஞானமுறைப்படி தயாரிப்பவர்கள்
TURBOW COMMERCIAL - ALAVEDDY
★ ★ ★ ★
பிரகாசமான சலவைக்கு
**பிறைற் சோப்**
[A 239]



## GLOBAL IN MADRAS

### சென்னையில் குளோபல்

| | |
|---|---|
| சர்வதேச தொலைபதி | Telex |
| சர்வதேச தொலைபேசி | I. D. D. Telephone |
| கொம்பியூட்டர் பயிற்சி | Computer Training |
| புகைப்படப் பிரதி | Xerox Copying |

ஆகிய சேவைகளுக்கு நாடுங்கள்

**GLOBAL BUSINESS SYSTEMS (Private) LTD.**
(G E E - G E E Complex)
(அண்ணா - சாந்தி தியேட்டர்களுக்கு மத்தியில்)
42/3, அண்ணாசாலை, சென்னை - 600002.
தொலைபேசி எண்: 843387 - 843408 Telex. 41 - 8193 SHAN - IN
குளோபலின் சேவை எல்லோருக்கும் தேவை. A-626


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணவில்லை



28-4-86 மந்திகை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்த சண்முகம் அருளம்பலம் வயது 61 என்பவரைக் காணவில்லை. அவரைக் கண்டவர்கள் கீழ்உள்ள விலாசத்தில் ஒப்படைக்கவும். சு. கண்ணம்மா புங்குடுதீவு, 9ம் வட்டாரம், வல்லன். [C 2131]


## சிதைவுக்குள்....

[1ம் பக்கத் தொடர்ச்சி]

டாரங்கள் கருத்துவெளியிட்டுள்ளன.

இக்குண்டுவெடிப்புச் சம்பவம் குறித்து ஆராய உயர் மட்ட சி ஐ டி. புலன் விசாரணைக்குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கி)

## யாழ். மாநகராட்சி

(4ம் பக்கத் தொடர்ச்சி)

சினிமா தியேட்டர் மூலம் கிடைத்துவந்த களியாட்டவரி 25லட்சம் ரூபா இப்போது கிடைப்பதில்லை, பல வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டு விட்டன. அடிக்கடிபதற்றநிலை ஏற்படுவதால் வர்த்தக நிலையங்கள் பூட்டப்படுகின்றன வாகனங்கள் தரித்து நிற்பதில்லை. இப்படியும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது'' இவை போன்ற காரணங்களினாலும் வருமானத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என விளக்கினர்,

### புதியகிளை நூலகங்கள்

நூலகங்கள் பற்றி அவர் தெரிவிக்கையில்:

''சுண்டுக்குளி, நல்லூர், வண்ணார்பண்ணையில் கிளை நூலகங்கள் திறக்கப்பட்டிருப்பதாகவும் குருநகரில் கிளை நூலகத்திற்கு கட்டடம் அமைக்கப்பட்டு வருவதாகவுங் முஸ்லிம் பகுதியில் கிளை நூலகத்திற்கான கட்டடத்தை பெற முயற்சி எடுக்கப்பட்டுவருவதாகவும் கூறினர்.

சிவில் நிர்வாகம் சீர்குலைந்திருக்கும் இவ் வேளையில், குறைந்த வசதிகளுடன் யாழ் நகர மக்களுக்கு நிறைந்த சேவையாற்றி வரும் ஆணையாளருக்கு மக்கள் ஒத்துழைப்பும் ஆதரவும் வழங்குவதன் மூலம் நகரில் ஒரு நல நிர்வாகத்தை ஏற்படுத்துவது மட்டுமன்றி மக்களுக்கான தேவைகளையும் பூர்த்திசெய்து கொள்ள முடியும் என்பதில் சந்தேகமில்லை. [க]


## கடைசிநேர வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

அல்சேஷசன் ஆண் பெண் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு தொடர்பு. திரு றேய் ராஜசிங்கம், சிவகுல வீதி உரும்பிராய் தெற்கு, உரும்பிராய். (C 2134)

Love Birds, ஆடுகளும் விற்பனைக்கு உண்டு. விலாசம். எஸ். செல்வகுமார், 199/3 கில்னர் கல்லூரி ஒழுங்கை யாழ்ப்பாணம். (C 2129)

### FOR SALE

Sisil [R60] Fridge for sale Topping Condition callers before 1 30 p m. Rajan 280, Navalar Rd, Jaffna [near Rasavin Thottam] [A 478]

எம்பயர் திரையில்
விஜயகாந்—ராதா
அம்மன்கோவில் கிழக்காலே

லிடோ Jaffna
10-30, 2-30, 4-30 6-30
BODY AND SOUL
(Colour)

2வது மாதம்
வெலிங்டன்
10-30, 2-30, 6-15
சிவகுமார், மோகன் அம்பிகா, கவுண்டமணி நடித்த
நான் பாடும் பாடல்
(கலர்)

லிபேட்டி சினிமாவில்
ரொப்லரின் புதிய வெளியீடு
அன்று SUPER MAN
இன்று SUPER GIRL
Fare Dunaway நடித்த
அதிக வசூலைக் கொடுத்த அழகோவியம்
10-30, 2-30, 4-45, 7-00
காட்சிகள் காண்பிக்கப்படும்.

## ஓராண்டு நினைவஞ்சலி



### திரு. சொக்கலிங்கம் சதாசிவம்
(அச்சா)

ஆண்டவன் படைப்பு:
13- 01- 1949

ஆழ்பவன் பறிப்பு:
04- 05- 1985

எங்கள் குடும்பத்தில் ஒளிவிளக்காய் இருந்து அன்படனும், பாசத்துடனும் வாழ்ந்த எங்கள் அன்புத் தெய்வமே! நீங்கள் எம்மை விட்டு பிரிந்து ஓராண்டு ஆனாலும் உங்களை ஒரு நிமிடமாவது மறக்க முடியவில்லையே! ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி: மலேஸ்வரி,
மக்கள்: நிசாந்தினி, நிசாளினி, தகப்பன்,
சகோதரர்கள்,
மைத்துனர்,
உறவினர்கள்
நண்பர்கள்

(C 2132)


வடக்கு, கிழக்கில்

# இடைக்கால காபந்து அரசாங்கம் வேண்டும்!

## யாழ்- மக்கள் மன்றம் கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

''இந்நேரத்தில் மிகமிக அவசர அத்தியாவசியமானது வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கான ஒரு இடைக்கால காபந்து நிர்வாகத்தை ஏற்படுத்துவதே. மக்கள் மனங்கள் எரிமலையாகத் தகிக்கின்ற சூழலில் அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகளை நடத்துவது பொருத்தமற்றது''

யாழ்ப்பாண மக்கள் மன்றம் ஜனதிபதி திரு ஜே. ஆர். ஜயவர்த்தனவுக்கு அனுப்பி வைத்துள்ள ஒரு அவசர தந்திச்செய்தியில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது இத்தந்திச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

''இருவேறு கோஷ்டிகளுக்கிடையே மோதுதல் நடைபெறுவதாகவும் அரசாங்கப் படைகள் இம்மோதுதலிலிருந்து விலகிநிற்கின்றது என அரசாங்க அறிக்கைகள் கூறுகின்ற பொழுதிலும் இரவு நேரத்தில் கூட ஹெலிகொப்டர்கள் தாக்குதலை மீண்டும் மீண்டும் நடத்திவரும் உண்மையை இங்குள்ள மக்கள் மட்டுமே அறிவர் மிக மோசமான ஒரு நிலையில் இங்கு சிவில் நிர்வாகம் ஸ்தம்பித்துள்ளது மட்டுமன்றி ஆயுதப்படைகள் மீதான தனதுகட்டுப்பாட்டையும் அரசாங்கம் இழந்துள்ளது. மிக அண்மையான எதிர்காலத்தில் இங்கு சிவில் நிர்வாகத்தை மீண்டும் ஏற்படுத்த உங்கள் அரசாங்கத்தினால் முடியும் என்ற நம்பிக்கை எமக்கு இல்லாததால், அவுஸ்திரேலியா, கனடா, இந்தியா போன்ற நேசபூர்வ நாடுகளின் கூட்டமைப்பு வாயிலாக வட. கிழக்குப் பிரதேசங்களில் ஒரு இடைக்கால காபந்து அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும் எனக் கோருகிறோம்.

''இராணுவத்தீர்வு அசாத்தியமானது என்பது தெளிவாகவுள்ளது. மத்தியஸ்தம் வகிக்கும் இந்தியாவை அரசியல் தீர்வுகான பேச்சுவார்த்தைகளை நிறுத்துமாறும் இடைக்கால காபந்து அரசை அமைக்க நடவடிகைகை எடுக்குமாறும் கேட்கிறோம்.''

## கிளிநொச்சி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வரும் தேடுதல் நடவடிக்கைகளால் பொதுமக்களின் நாளாந்த வாழ்க்கை சீர்குலைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை புத்துவெட்டுவானிற்குச் செல்லும் பாதையில்உள்ள கொக்காவில் இராணுவ முகாமருகாமையில் பொதுமக்களைச் செல்லவேண்டாமென இளைஞர் கோஷ்டி ஒன்று எச்சரித்துள்ளதாக புத்துவெட்டுவான் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

## இனப்பிரச்னை--

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இரு பக்கப் பத்திரங்களில் கடந்த ஏப்பிரல் 4ந் திகதி வெளியிட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை. பி. சிதம்பரம் தலைமையிலான இந்தியக் குழு தேசியபந்தோபஸ்து அமைச்சர் திரு லலித் அத்துலத்முதலியை நேற்று 3 மணி நேரம் சந்தித்து உரையாடியது. இந்த உரையாடலின்போது சட்டம், ஒழுங்கு பற்றி ஆராயப்பட்டது.

இந்தியக்குழு மகாவலி, காணி காணி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினி திசாநாயக்காவையும் நேற்றுச் சந்தித்தது. காணி, நில பங்கீடுகள் பற்றி இச்சந்திப்பின் போது ஆராயப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. (கி)

## ஏயர்லங்கா...

(1ம் பக்கத்தொடர்ச்சி)

னடியாகக் கொல்லப்பட்டனர். 41 பேர் காயமடைந்தனர். பலியானவர்களில் குழந்தை ஒன்றும் அடங்குகிறதெனத் தெரிவிக்கப்பட்டது

### காதல் ஜோடி

விமானத்தின் பின்புறத்தில் அமர்ந்திருந்த வெளிநாட்டுக் 'காதல் ஜோடி' ஒன்றும் மயிரிழையில் உயிர்தப்பியது.

திடீரென பலத்த சத்தத்துடன் குண்டு வெடித்ததாகவும், தமக்குப்பின் புறத்தில் புகைமண்டலமும், நெருப்பும் தென்பட்டதாகவும், தொடர்ந்து தனது தோள் மீது தனது காதலி ஏறிக் கொள்ளவே தாம் வெளியே அவருடன் குதித்து தப்பியதாக அந்த வெளிநாட்டு காதலன் கூறினர்.

காயமடைந்தவர்கள் கட்டுநாயக்காவிலிருந்துஅம்புலன்ஸ் வண்டிகளிலும், ஹெலிகப்டரிலும் நீர் கொழும்பு வைத்தியசாலைக்கும், கொழும்பு வைத்திய சாலைகளுக்கும் கொண்டு செல்லப்பட்டனர்.

12 பேர் படுமோசமாகக் காயமடைந்துள்ளனர். இவர்களில் 3 பேர் இலங்கையராவர்.

### 30 பேர் பலி?

கொல்லப்பட்ட 21 பேரில் அநேகரின் சடலங்கள் மிகவும் கருகிய நிலையில் அடையாளம் காண முடியாதவாறு உள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

இதேவேளை சில ஊர்ஜிதமற்ற செய்திகள் 30 பேர் இக் குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டிருக்கலாமெனத் தெரிவித்துள்ளன. (ய - கி)

## பாலஸ்தீன....

[1ம் பக்கத் தொடர்ச்சி]

அவர்களின் விபரங்கள் அறிவது ஒத்திப்போடப்பட்டுள்ளது.

பாதுகாப்பமைச்சின் அனுமதி கிடைக்கும்வரை அந்த விமானததில் செல்லவிருந்த பயணிகள் பற்றிய பெயர்ப்பட்டியலை வெளியிடப்போவதில்லையென ஏயர் லங்கா தெரிவித்துள்ளது. (ய)

## நுண்கலைப்பீட அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் இராமநாதன் நுண்கலைப் பீட இசைக் கலைமணி, நாட்டியக் கலைமணி ஆகிய பயிற்சிநெறிகளுக்கான விண்ணப்பங்கள் யாழ். பல்கலைக் கழகப் பதிவாளரினால் கோரப்பட்டுள்ளன.

இப்பயிற்சிக்கு க. பொ. த. சாதாரணதர பரீட்சையில், தமிழ், கணிதம், சங்கீதம் உட்பட ஆறுபாடங்களில் சித்தி பெற்றிருக்கவேண்டுமென்றும், க. பொ. த. சாதாரணதரத்தில் சங்கீதம் சித்தியடையாதவர்கள் வடஇலங்கை சங்கீத சபையினால் நடத்தப்படும் பரீட்சையில் சித்திபெற்றிருக்க வேண்டும் என்றும் க. பொ. த, (உயர்தரம்) சித்தி அவசியமில்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. விண்ணப்ப முடிவு திகதி 31-5-86 என்று யாழ். பல்கலைக் கழகப் பதிவாளர் 'ஈழநாடு'வுக்கு தெரிவித்தார். (வா)

## பொதுத்தாதியர்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட எமது சங்கம் நாட்டு நிலைமை காரணமாக வருடாந்தக்கூட்டத்தையே நடாத்த முடியாதுள்ளது இவ் வேளையைப் பயன்படுத்தி சிலவிஷமிகள் சுயநலநோக்குடன் எமது கட்டுக்கோப்பை உடைக்க எத்தனிக்கிறார்கள். ஆகவே இனத்தின் விடிவை நினைவில் கொண்டு எச்சரிக்கையாக இருந்து தீர்க்கதரிசனத்துடன் செயற்படுவோமாக. காலஞ்சென்ற தமிழ்த்தொழிற்சங்கக் கூட்டணித் தலைவர் திரு. ஆலாலசுந்தரத்தையும் இவ்வேளையில் நினைவுகூர்வோமாக.


## அறிவித்தல்

### ஸ்ரார் பியூப்பில் அக்கடமி

G. P. S. றோட், கல்வியங்காடு.

எமது அக்கடமி சகல வகுப்புக்களும் புதிய நேர அட்டவணைப்படி திங்கள் (5- 5- 86) முதல் நடைபெறும்.

இவ்வண்ணம்
க. ஜீவமோகன்
(அதிபர்)

[C- 2133]

## வேலையாட்கள் தேவை

### கொழும்பு சாமுவேல் சன்ஸ் அன் கொம்பனியரின்

நிர்வாகத்தில் அமைக்கப்பட்டுவரும் மன்னார், வங்காலை, முருங்கன், அடம்பன், (மாண்டை) நீர் விநியோகத் திட்டத்தில் பணி புரிவதற்கு பின்வரும் பதவிக்கு வெற்றிடங்கள் உண்டு.

தச்சுவேலை செய்பவர்கள்

மேலும் நேர்முகப்பரீட்சைக்கு 05- 05- 86 திங்கட்கிழமை காலை 9-00மணிமுதல் 12-00 மணிவரை

### சாமுவேல் சன்ஸ் அன் கொம்பனி லிமிட்டட்,

206, 208, ஆஸ்பத்திரிவீதி,
யாழ்ப்பாணம்.

நேரில்வரவும். (A 477)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
ஞாயிற்றுக்கிழமை 4-5-86

## இந்திய இராணுவ தலையீட்டுக்கு எதிர்ப்பு

(சென்னை)

இலங்கை இனப் பிரச்னையில் இந்தியா ராணுவ ரீதியில் தலையிட வேண்டும் என்ற கோரிக்கையை தமிழ்நாடு சட்டப் பேரவையில் அங்கம் வகிக்கும் பெரும்பாலான கட்சிகள் எதிர்த்துள்ளன.

இதேவேளை இலங்கை இனப் பிரச்னையில் தற்போது தமிழ்நாடு அரசு மேற்கொள்ளும் நிலையை அக் கட்சிகள் அங்கீகரித்தன. (பி)

## 4 பேர் மீது விசாரணை

(கொழும்பு)

அநுராதபுரம் எரிபொருள் நிலைய சேதம் தொடர்பாக வடபகுதியைச் சேர்ந்த நால்வர் விசாரணைக்குட்படுத்தப் பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக எரிபொருள்குழு ஊழியர் சிலரும், விசாரணை செய்யப்பட்டுள்ளனர்.

வழக்கமாக குதத்திற்கு வெளியில் 24 மணி நேரம் நின்ற பின்னரே வடபகுதி பவுஸர்கள் உள்ளே அனுமதிக்கப்படும் ஆனல் சம்பவதினம் வடபகுதி பவுஸர்கள் 19 மணி நேரம் வெளியே நின்ற பின்னரே உள்ளே அனுமதிக்கப் பட்டதாக விசாரணையில் தெரியவந்துள்ளதாக கூறப்படுகிறது. (ய)

## பென்ஷன் வழங்கும் திகதிகள்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் தபால் கந்தோரினுல் இம்மாதம் வழங்கப் படவிருக்கும் ஓய்வூதியம் பின்வரும் திகதிகளில் யாழ். கோட்டையில் வைத்து வழங்கப்படவிருக்கிறது

19ம் திகதி திங்கட்கிழமை கரவெட்டி, வல்வெட்டித்துறை சங்கானை, கொடிகாமம்.

20ம் திகதி செவ்வாய்க்கிழமை: யாழ்ப்பாணம் சைதடி

21ம் திகதி புதன்கிழமை: வட்டுக்கோட்டை, வசாவிளான், மானிப்பாய், உரும்பிராய்

26ம் திகதி திங்கட்கிழமை: தெல்லிப்பழை, கோப்பாய், பண்டத்தரிப்பு, வண்ணார் பண்ணை.

27ம் திகதி செவ்வாய்க்கிழமை: சுன்னுகம், நெடுந்தீவு, அனலைதீவு, நயினாதீவு, வேலணை

28ம் திகதி புதன்கிழமை: பருத்தித்துறை, கொக்குவில், காங்கேசன் துறை.

29ம் திகதி வியாழக்கிழமை: ஊர்காவற்றுறை அச்சுவேலி, புங்குடுதீவு, சுழிபுரம்

30ம் திகதி வெள்ளிக்கிழமை: அளவெட்டி, காரைநகர் சாவகச்சேரி, யாழ்ப்பாணம். [வா]

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில 1986-ம் ஆண்டு மே மாதம் 4-ம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P O Box 49, Telegram, Eelanadu, Telephone 22389, 24126.

## நட்பு முரண்பாடுகளை ஆயுதமுனையில் தீர்க்க முயலக்கூடாது

### ஈ பி ஆர் எல் எவ் அறிக்கை

[யாழ்ப்பாணம்]

யாழ்ப் பிராந்தியத்தில் எதிரியின் செயற்பாடு கட்டுப்படுத்தப்பட்டிருந்தாலும், ஈழத்தின் ஏனைய பிராந்தியங்கள் அனைத்திலும் எதிரிப்படைகள் அட்டூழியங்களை நிகழ்த்திய வண்ணம் இருக்கின்றன. அங்கு வாழும் மக்கள் சமைத்த உணவைக்கூட நிம்மதியாக உண்ணமுடியாத அளவுக்கு எந்த நேரமும் ஆபத்தை எதிர்நோக்கியவாறு பீதியுடன் வாழ்ந்து வருகிறார்கள். பலர் வீடு, வாசல், உறவினர்களை இழந்து உயிரை மட்டும் பாதுகாத்துக்கொண்டு காடுகளில் ஒளிந்தும், பலர் நிர்கதியாக அகதி முகாம்களிலும் வாழுவதுமான நிலைமை காணப்படுகின்றது இந்நிலையில் எதிரியின் கொட்டத்தை அடக்கி எமது மண்ணைக்காக்க வேண்டிய கடமை எமக்குள்ளது. இதற்கு மக்களதும் சகல போராட்ட இயக்கங்களதும் ஒற்றுமை இன்றியமையாததாகும்.

இவ்வாறு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையின் விபரம் வருமாறு;

இன்றைய காலகட்டத்தில் எமது போராட்டத்திற்கு அத்தியாவசியமானது ஒற்றுமையும், கூட்டுழைப்புமே. எம்மிடையே ஒற்றுமை குலைந்தால் எமது போராட்டம் பலவீனப்பட்டு எதிரிக்கு வாய்ப்பானதாகிவிடும் எம்மிடையே இருக்கக்கூடிய முரண்பாடுகள், நட்பு முரண்பாடுகள் எதிரிக்கும் எமக்கும் உள்ள முரண்பாடே பகைமுரண்பாடு. நாம் பகைமுரண்பாட்டை - அதாவது எதிரிக்கும் எமக்கும்இடையேயான முரண்பாட்டை தீர்ப்பதற்கே ஆயுதங்களைப் பாவிக்கவேண்டும். எம்மிடையே எழும் முரண்பாடுகளை ஆயுதங்கள் மூலம் தீர்த்துக்கொள்ள முனையக்கூடாது. அவை நட்பு முரண்பாடுகள் என்ற ரீதியிலேயே அணுகப்படவேண்டும்.

இன்று கசப்பான வகையில், ஈழ விடுதலைப் போராட்டத்தின் நெருக்கடி மிக்க காலகட்டத்தில் விடுதலைப் போராட்டத்தில் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட போராட்ட இயக்கங்களிடையே ஏற்பட்டுள்ள மோதல்கள் வேதனைக்குரியது. இவை தொடர்ந்து நீடிக்காவண்ணம் தீர்க்கப்படவேண்டியது உடனடி அவசியம்

இக்கடமையைச் செய்ய வேண்டிய அதேவேளை நாம் எமது போராட்டத்தில் சளைக்காது தொடர்ந்து முனைப்புடன் முன்னேறிச் செல்ல வேண்டும். எமக்கு விடுதலையே முக்கியம். அதையிட்டு எவ்வித துன்பங்களையும் தாங்கிக் கொள்ளும் நெஞ்சுறுதியுடன் செயலாற்றுவோம்.


## 'ஷெல்' தாக்குதல் இருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் நேற்றிரவு நடந்த ஷெல் தாக்குதலில் இருவர் காயமடைந்தனர்.

பஸ் நிலையத்தில் ஷெல் விழுந்து வெடித்துச் சிதறியபோது இவர்கள் காயமடைந்ததாகக் கூறப்படுகிறது. இத் தாக்குதலைத் தொடர்ந்து எதிர்த்தாக்குதலும் நடைபெற்றது.

இத் தாக்குதலின் போது நகரில் சில பகுதிகள் இருளில் மூழ்கியது. (க)



படம் I இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி(இடது) மேதினத்தன்று யாழ். நகரில் நடத்திய ஆர்ப்பாட்ட ஊர்வலம்.

படம் II மேற்படி கட்சியின் மேதினக் கூட்டத்தில் திரு. சோ. தேவராஜா பேசிக்கொண்டிருப்பதையும் தலைமைவகித்த திரு. கே. ஏ. சுப்பிரமணியம், திரு. கே. செந்திவேல், திரு. ந. இரவீந்திரன் ஆகியோர் மேடையில் இருப்பதையும் காணலாம்.

## கொழும்பு சென்ற பஸ்கள் ஓமந்தையுடன் திரும்பின

(வவனியா)

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு சென்ற சகல பஸ் வண்டிகளும் நேற்று ஓமந்தைக்கப்பால் செல்லாது மீண்டும் யாழ்ப்பாணம் திரும்பின.

நேற்றுக் காலை கொழும்பு கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இடம் பெற்ற விமானக் குண்டு வெடிப்பைத் தொடர்ந்து நிலவிய பதற்றம் காரணமாகவே இவ்வாறு பஸ் வண்டிகள யாழ் திரும்பின எனறு அறியபபடுகிறது.

இதேவேளை நேற்று கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த சகல வாகனங்களும் அநுராதபுரத்திற்கண்மையில் வைத்து பலத்த கல்வீச்சுக்குட்பட்டதாகவும் ஒரு சிலருக்கு சிறிய காயங்கள் ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது. (பி)

## ''தீவிரவாதிகளே பொறுப்பாளிகள்' -லலித்

[கொழும்பு]

'சமரச முயற்சிகளைக் குழப்பும் நோக்கம் கொண்ட தமிழ் தீவிரவாதக் குழுக்களே நேற்றைய விமானக் குண்டுவெடிப்புச் சம்பவத்துக்குப் பொறுப்பாகும்' என்று தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத்முதலி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

''தற்போது இடம் பெற்றுக் கொண்டிருக்கும் இனப் பிரச்னைக்கான சமரசத் தீர்வு முயற்சிகளை இந்தத் தாக்குதல் மூலம் சீர்குலைக்கும் எண்ணத்தைத் தீவிரவாதிகள் கொண்டுள்ளனர்.

இந்த விமானக் குண்டு வைப்புச் சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் எந்த வகையிலும் விடுதலைப் போராட்ட வீரர்களாக மாட்டார்கள். அவர்கள் வெறும் பயங்கரவாதிகளே'' எனவும் கூறியுள்ளார்.

## இனப் பிரச்னை: இலங்கைக்கு இந்திய அனைத்துகட்சிக் குழு!

### வாஜ்பாய் தகவல்

[சென்னை]

''இலங்கை இனப் பிரச்னைக்கு அரசியல் தீர்வொன்று காணும் முயற்சியில் இந்தியாவின் அனைத்துக்கட்சி பிரதிநிதிக்குழுவொன்றை அனுப்புவது குறித்து, இன்று மதுரையில் நடக்கும் அனைத்துக்கட்சி மாநாட்டில் முடிவெடுக்கப் படும்'' என்று பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவர் திரு. வாஜ்பாய் தெரிவித்துள்ளார்.

தி மு க. தலைவர் கலைஞர். கருணாநிதி கூட்டியிருக்கும் அனைத்துக்கட்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்சென மதுரை செல்லும் வழியில் திரு. வாஜ்பாய் பத்திரிகையாளருக்கு அளித்த பேட்டியின் போது மேற்கண்டவாறு கூறினார். அவர், மேலும் ''இத்தகைய பிரதிநிதிக் குழுவின் வரவை இலங்கை அரசு ஏற்றுக்கொண்டுள்ள என்றும் இக்குழு இலங்கையின் பௌத்த மதத் தலைவர்களுடனும், மற்றும் இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய மதப்பிரமுகர்களுடனும் பேச்சு நடத்தும் என்றும் கூறினர். (பி)

## இன்று வர்த்தக சங்க வருடாந்தக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வர்த்தக சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று காலை யாழ். பாரதி பஷா வித்தியாசாலையில் நடைபெறும்

சங்கத்தில் உறுப்பினர்களாக பதிவு செய்த வர்த்தகர்கள் மட்டுமே கூட்டத்திற்கு அனுமதிக்கப்படுவார்கள் எனச் சங்கச் செயலாளர் திரு எஸ். நமசிவாயம் தெரிவித்தார் [க]

## சித்திரத்தேர் வெள்ளோட்டம்

யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் திருநெல்வேலி சிவன் கோவில் அருள்மிகு நீலாயதாக்ஷி சமேத ஸ்ரீ காயாரோகண சுவாமிகோயில் புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டவிழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் நடைபெறவுள்ளது

திருநெல்வேலி 'ஆறுமுகம் சிற்பாலயம்' ஸ்தபதி சிற்பகலாமணி ஆறுமுகம் ஜீவரத்தினம் குழுவினரால் இருபது லட்சம் ரூபா செலவில் உருவாக்கப்பட்ட இப்புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டவிழாவில் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, அருள்மொழி அரசி திருமதி வசந்தா வைத்தியநாதன், திருமதி மனோன்மணி சண்முகதாஸ், யாழ். பல்கலைக்கழக பதிவாளர் திரு. வே. ந சிவராசா ஆகியோர் சிறப்புரை நிகழ்த்துவார்கள்.

மங்கள இசையும் இடம் பெறவுள்ளது. [வா]

## முத்திரை இல்லை

[வலவெட்டித்துறை]

வல்வெட்டித்துறை தபாற் கந்தாரில் ஒரு முத்திரையும் இல்லை. இதனல் இப் பகுதி மக்கள் தமது உள்ளூர் தபால்களையும், வெளியூர்த் தபால்களையும் அனுப்புவதற்குக் கடைகளில் விலைகுறைந்த அதிகளவில் முத்திரைகளை வாங்கி கடித உறைகளில் நிரம்ப ஒட்டி அனுப்ப வேண்டியுள்ளது. தபாற் கந்தோரில் முத்திரை இல்லாததால் தனியார் கடைகளில் இருந்த முத்திரைகளும் முடிந்து கொண்டு போகின்றன.

## மரண அறிவித்தல்

### திருமதி தம்பிஐயர் பர்வதபத்தினி அம்மாள்

பர்வதபத்தினி அம்மாள் 2-5-86 வெள்ளிக்கிழமை இரவு காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற நாகேந்திர ஐயர் தம்பிஐயர் அவர்களின் பாரியாரும், காலஞ்சென்ற இ சி இரகுநாதையர் (வாக்கிய பஞ்சாங்கம் கணிதர்), இரத்தினசபாபதி ஐயர், வெங்கடாசலக் குருக்கள், சோமசுந்தர ஐயர், யோகாம்பிகை அம்மாள் ஆகியோரின் சகோதரியும், யோகேஸ்வர சர்மா, விஸ்வநாத சர்மா, காலஞ்சென்ற தியாகராச சர்மா, சரஸ்வதி அம்மாள் ஆகியோரின் தாயாருமாவார் அன்னாரின் ஈமக்கிரியைகள் சனிக்கிழமை பிற்பகல் கொக்குவில் மயானத்தில் நடைபெற்றது இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

கோவில் வீதி, கொக்குவில்.

தகவல்:- த. யோகேஸ்வர சர்மா.

(C-2127)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org